★
REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 மே 16 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 113 | Monday 16, May, 2022 | 08பக்கங்கள் | 40/-

## பாடசாலைகளுக்கு 20 இல் விடுமுறை;
### ஜூன் 20 மீள ஆரம்பம்



கல்வி பொது தராதர சாதாரண தரப்பரீட்சைக்காக எதிர்வரும் 20ஆம் திகதி விடுமுறை வழங்கப்படுகின்ற சகல பாடசாலைகளும் ஜூன் மாதம் 20ஆம் திகதி மீள 06

---

### அரசியல் கட்சி, கொள்கைகளுக்கு இடமளிக்காது
## நாடு எனும் ரீதியில் சவால்களை வெற்றி கொள்ள ஒத்துழைக்கவும்
### SLPP பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஜனாதிபதி கோரல்



அரசியல், கட்சிக் கொள்கைகளுக்கு தற்போதைய நிலையில் முக்கியத்துவம் வழங்காது நாடு என்ற ரீதியில் எதிர்கொண்டுள்ள சவால்களை வெற்றி கொள்ள சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்தார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களுடன் 06

---

### "காலி முகத்திடல் ஆர்ப்பாட்டம்"
## தேவைகளை அறிவதற்கு குழுவை அமைத்த பிரதமர்
### ரோஸி, ருவன் அடங்கலாக பலர் குழுவில்



'காலி முகத்திடல் ஆர்ப்பாட்ட'த்தில் ஈடுபடுபவர்களின் தேவையை அறிந்து செயற்படும் வகையில் பிரதமர் குழுவொன்றை நியமித்துள்ளார்.

காணொளியொன்றை வெளியிட்டு உரையாற்றுகையிலேயே 06

---

## மே. 18 இல் இலங்கையில் தாக்குதலுக்கு புலிகள் திட்டம்?
### இந்திய ஊடக செய்திக்கு பாதுகாப்பு அமைச்சு மறுப்பு

ஸாதிக் ஷிஹான்

இலங்கையில் எதிர்வரும் மே 18 ஆம் திகதி புலிகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளது என இந்தியாவின் ஹிந்து பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி தொடர்பில் இலங்கை பாதுகாப்பு அமைச்சு விஷேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் ஊடக மையத்தின் பணிப்பாளர் கேர்ணல் நளின் ஹேரத்தின் கையொப்பத்துடன் வெளியிட்டுள்ள 06

Ministry of Defence
பாதுகாப்பு அமைச்சு

---

# நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு நாட்டில் தடை எதுவும் இல்லை!

**நிகழ்வுகளில் ஆத்மாவை வைத்து எவரும் அரசியல் செய்யக்கூடாது**

**போரில் இறந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நினைவேந்த உறவுகளுக்கு முழு உரிமையும் உண்டு**

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நாட்டில் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு எந்தத் தடையும் இல்லை எனவும் போரில் இறந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நினைவேந்த உறவுகளுக்கு முழு உரிமை உண்டு. அதை எவரும் தடுக்கவே முடியாது எனவும் புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், நினைவேந்தல் நிகழ்வுகளில் இறந்தவர்களின் ஆத்மாவை வைத்து எவரும் அரசியல் செய்யக் கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இறுதி கட்டப் போரில் இறந்தவர்களை நினைவுகூரும் 'முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்' வாரம் தற்போது வடக்கு கிழக்கு உட்பட பல பகுதிகளில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இந்த நினைவேந்தல் வாரத்தின் இறுதி நாளான 06




இலங்கை மக்களின் துயர் துடைக்கும் வகையில் இலங்கை மக்களுக்கான தமிழக அரசின் நிவாரண நிதிக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் ரூ. 5 இலட்சம் வழங்கப்பட்டது. இதனை தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் சனிக்கிழமை (14) முதலமைச்சரின் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க ஸ்டாலினிடம் கையளித்தபோது எடுத்த படம். இச்சந்திப்பின்போது மாநில செயலாளர் கே.எம்.நிஜாமுதீன், பத்திரிகையாளர் திருச்சி ஷாகுல் ஹமீது ஆகியோரும் காணப்படுகின்றனர்.



## தகுதியான ஒருவரே பிரதமராக நியமனம் 06
டக்ளஸ் தேவானந்தா புகழாரம்

---

## மே 9 அசம்பாவிதங்களுடன் தொடர்புடையோர் கைது
### ஒரு வாரத்தினுள் அனைவரும் கைதாவர்



மே 9 மற்றும் அதற்குப் பிந்திய தினங்களில் நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக தாக்குதல்கள், தீவைப்புக்கள் மற்றும் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை ஆகியவற்றுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அனைவரும் ஒரு வாரத்துக்குள் கைது செய்யப்படுவார்கள் என பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழ் செயற்படும் விசேட 06

---

### "எரிபொருள் பற்றாக்குறை"
## தனியார் பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்படும்
### தனியார் பஸ் உரிமையாளர்கள் அறிவிப்பு



டீசல் இன்மையால் நாடு முழுவதும் பஸ் சேவைகளை 10 சதவீதமாக குறைக்க நேரிட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. தொடர்ந்து டீசல் கிடைக்காவிடத்து நாளை முதல் தனியார் பஸ்கள் சேவையில் இருந்து விலக நேரிடும் என அந்தச் சங்கத்தின் தலைவர் 06

---

## சபை முதல்வராக தினேஷ், பிரதம கொறடா பிரசன்ன
### இருவரும் மீண்டும் தெரிவாகினர்



சபை முதல்வராக அமைச்சர் தினேஷ் குணவர்தனவும், ஆளுந்தரப்பின் பிரதம கொறடாவாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளனர். புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டதன் பின்னரான முதலாவது பாராளுமன்ற அமர்வு நாளை 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. இதன்போது ரஞ்சித் சியம்பலாபிட்டிய 06

---

## சுற்றுலா பயணிகளின் வருகை 60% வீழ்ச்சி
### நிலவும் நெருக்கடி நிலை காரணம்




லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலை காரணமாக இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 60 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. 06

---

## நாட்டின் நெருக்கடி நிலையை தீர்க்க பிரதமர் ரணிலே பொருத்தம்
### த.ம.தே. கூட்டணி தலைவர் விக்கி புகழாரம்



நாட்டின் நெருக்கடி நிலையை தீர்ப்பதற்கான தகைமை பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு உள்ளதென தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் எமது செய்திச் சேவைக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இதனடிப்படையில் தாமும் அவருக்கு ஆதரவு வழங்குவதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். இதேவேளை, நிபந்தனைகளுடன் 06

---

## புதிய அமைச்சர்களாக சுசில், அனுர யாப்பா
### நிதியமைச்சு பிரதமர் வசம்

லோரன்ஸ் செல்வநாயகம்



அமைச்சரவைக்கு மேலும் இரண்டு புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. அதற்கிணங்க புதிய கல்வியமைச்சராக முன்னாள் 06

---

### ஜனாதிபதி, பிரதமர் கோரியும்
## நிதியமைச்சு பதவியை ஏற்க மறுத்த அலி சப்ரி
### முஸ்லிம்களுக்காக பலவற்றை செய்துள்ளதாக தெரிவிப்பு



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் இணைந்து கொள்ளுமாறும் நிதி அமைச்சுப் பதவியை பொறுப்பேற்குமாறும் அலி சப்ரியிடம் மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதும் அவர் அதனை மறுத்துள்ளார். 5 முஸ்லிம் அமைச்சர்கள் நல்லாட்சி அரசாங்கத்தில் இருந்தார்கள். அவர்கள் சாதிக்காத விடயங்களைக்கூட, 06

---

## வீடுகளை இழந்த எம்.பிமாருக்கு தற்காலிக வீடுகள்



வன்முறை காரணமாக வீடுகளை இழந்து இடம்பெயர்ந்து வாழும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலவத்துகொட வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடுகளை 06

---



## சட்ட மறுசீரமைப்பு குழு சுமந்திரன் MP தலைமையில் 06
பிரதமரின் கோரிக்கைக்கு இணக்கம்



## தாக்குதல்கள் தொடர்பாக இதுவரை 230 பேர் வரை கைது 06
பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவிப்பு

---

## அரசியல் ஏலத்தில் SJB எம்.பிக்கள்
### விற்பனைக்கு இல்லை



ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்கான மக்கள் ஆணையை ஏலத்தில் விட தயாராக இல்லை. எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இணையவுள்ளதாக போலியான செய்திகளை வெளியிட்டு சர்வாதிகாரத்தை பாதுகாப்பதற்காக செயற்பட வேண்டாம் என்று 06

---

## பிரதமர் ரணிலுக்கு எனது பூரண ஆதரவு
### SLFP பற்றி எனக்கு கவலையில்லை



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எவ்வாறான தீர்மானம் எடுத்தாலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க தான் தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்துள்ளார். நெருக்கடி நிலையின் போது பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொண்டமை தொடர்பில் தெரிவிக்கையிலேயே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

---

## மக்கள் நலன் சார் விடயங்களுக்கு TMVP பூரண ஆதரவு



பொருளாதார ரீதியாக நாடு எதிர்நோக்கி இருக்கின்ற மிக இக்கட்டான இச்சூழலில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற மக்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்குத் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியானது மக்கள் வழங்கிய ஆணை மூலம் கிடைத்திருக்கின்ற பாராளுமன்ற ஆசனத்தின் அதிகாரங்களைப் பூரணமாகப் பயன்படுத்த ஒருபோதும் 06

---

## உண்டியல் முறையில் பணப் பரிமாற்றம்
### இருவர் STFயினரால் கைது



உண்டியல் முறையில் 47,000 அமெரிக்க டொலர்களை மாற்ற முனைந்த இருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் பொரலஸ்கமையில் வைத்து கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 40, 52 வயதுகளையுடையவர்களென தெரிவிக்கப்படுகிறது. மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் 06

---

### விக்கல் வீராச்சாமி



அண்ணே, இவங்க சிலர் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல யாரையும் விடமாட்டாங்க போல கிடக்கு, உதுக்கு என்ன செய்யலாம்....

நான் நினைக்கிறேன் தம்பி, நாட்டில ஊடகச் சுதந்திரம் ஓவரா போச்சு போல, டிவியும், பேப்பரும், ஃபேஸ்புக்கும் சனத்த மிச்சம் குழப்புது...!!!

# இலங்கை தேசத்திற்காக ஒன்றிணைந்து பிரார்த்தனை செய்வோம்

## பிரார்த்தனை மூலம் தேசிய ஐக்கியத்தை கட்டி எழுப்புவோம்





### தேசிய ஐக்கியத்திற்கான முகத்துவாரம் மிஸ்பா ஜெப மிஷனரி ஆலயத்தின் தலைமை போதகர் வண. ஜெ.ஜெ. சாரங்கபாணி அழைப்பு



நமது நாடு இன்று பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. இந்த இக்கட்டிலிருந்து நாட்டை மீட்கும் பொறுப்பு இந்நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டு. அந்த வகையில் எமது இடையறா ஜெபத்துக்கூடாக கர்த்தராகிய தேவன் எமக்கு தந்த தரிசனத்தைப் பகிர்ந்து கொள்வது



பயனுடையதாகும். இன்று (16.05.2022) முகத்துவாரம் மிஸ்பா ஜெப மிஷனரி ஆலயத்தின், அதன் தலைமை போதகர் வண. ஜெ.ஜெ. சாரங்கபாணியின் தலைமையில் ஜெப ஒன்றுகூடல் காலை 9.00 மணிக்கு நடைபெறும். தேவ ஆசீர்வாதத்துக்கூடாக எமக்கு வழங்கப்பட்டுள்ள பாரத்தை, பொறுப்புக் கூறலை ஆசீர்வாதமாகப் பெற்றுக் கொள்ளும் இதய தாகத்தோடு முகத்துவாரம் மிஸ்பா ஜெப மிஷனரி இலங்கைக்கு தேவ ஆசீர்வாதம் வேண்டி முழு நாள் பிரார்த்தனையில் ஈடுபடுகிறது. இலங்கை தேசத்தை நேசிப்பவராக இருக்கிறார், பாவங்களிலிருந்து விடுதலையைக் கொடுத்து எம்மை இரட்சிக்க தயாராக இருக்கிறார். அவரை ஆவிக்குரிய பரிசுத்தத்தோடு வரவேற்க நாம் தயாராக இருக்க வேண்டும் பொருளாதார அபிவிருத்தியிலும் வாழ்வியலிலும் பிறநாடுகளுக்கு முன்மாதிரியாக திகழக்கூடிய தேவ சித்தம் நிறைவேற வேண்டும். நாம் அனைவரும் ஆசிர்வாதத்தின் அடையாளங்களாக மாறவேண்டியது அவசியம். இந்த நாட்டில் இனங்களுக்கிடையே நல்லிணக்கம் வரவேண்டும். தம் அயலாரை நாம் நேசிப்பது போல அடுத்தவரது குற்றங்களையும் மறப்பது நல்ல பண்பு. தாம் செய்வது இன்னதென்று அறியாதவர்கள் இருக்கலாம். ஆனால் யாரையும் நியாயம் தீர்க்க அதிகாரம் எமக்கு இல்லை. மண்டியிட்டு மன்றாட வேண்டியவர்கள் நாம். கிறிஸ்தவ மதம் யாரையும் வஞ்சிப்பது அல்ல வஞ்சம் தீர்ப்பது அல்ல. நெஞ்சம் நிறைய தவறுகளை மன்னிப்பதோடு மறுப்பதும் எமது பண்பு. அதனால் தான் நாட்டு நலனுக்காக நாம் ஒன்று கூடிபிரார்த்திக்க வேண்டிய நேரமாக இதனை நாம் எடுத்துக் கொள்கிறோம்.கிறிஸ்தவ சமூகம் கறை படிந்த வரலாறுகள் மீளவும் உயிர்ப்பெறாத வகையில் எமது ஜெபங்கள் நாட்டு மக்களை தாங்கும் என எதிர்பார்க்கிறோம். நாடுமுழுவதும் நல்லிணக்கம் கட்டியெழுப்படும் என்பது நிச்சயம். எமது ஆண்டவர் நல்லவர், வல்லவர் வார்த்தையில் உண்மையுள்ளவர். வாக்குசுத்தம் மாறாதவர். சகலரும் மன்னிப்புக்குரியவர்களாக பாராற்றப்பட வேண்டும் என்பது இயேசுவின் சித்தம்.





தேவனின் ஆசிர்வாத கரங்களின் அபிஷேகம் மட்டுமே இரட்சிப்பை தரும். நாட்டுக்கு சமாதானத்தை நல்கும். ஆவிக்குரிய வாழ்க்கையில் நாமும் பங்காளர்களாக மாறுவோம்.

கர்த்தரின் தரிசனம் நித்தியமானது. சத்தியமானது. நாட்டை வளர்ச்சிப்பாதையில் இட்டுச் செல்லும் பாங்குடையது. விசுவாசிப்போம்.

**தேவதாஸ் சவரிமுத்து**
சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்

### இலங்கையே உன் காயத்தை இயேசு கிறிஸ்து ஆற்றுவார்

தேசம் முழுவதும் கொள்ளையாகி வெறுமையாயிற்று, தேசத்தின் ஜனங்கள் புலம்பி வாடுகிறது, உயர்ந்தவர்கள் தத்தளிக்கிறார்கள். சந்தோஷம் ஓய்ந்தது, வீதிகளில் கூக்குரல் உண்டாகி, மகிழ்ச்சி தேசமெங்கும் அற்றுப் போகிறது.

வாருங்கள் இறைவனிடத்தில் தாழ்ந்து மன்றாடுவோம்.

1 தீமோத்தேயு 2:23 'தேசத்தில் நாம் எல்லா பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும்,அதிகாரமுள்ள யாவருக்காகவும் விண்ணப்பம் செய்யவேண்டும்.

இறைவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது.'

ஆபத்து காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு அப்பொழுது நான் உனக்கு மறு உத்தரவு தருவேன்.

நம் தேசம் பசுமையும், செழிப்பும், எங்கும் தண்ணீரினால் சூழப்பட்ட, மூன்று மொழிகளால், நான்கு இனத்தையும் கொண்ட இந்த மக்களின் மத்தியில், ஐக்கியமும், நம்பிக்கையும்,சகோதரத்துவமாய் இணைந்து, இளம் தலைமுறைகள் பக்தியுடன் வாழவும், ஸ்திரமான அரசாங்கம் அமையவும் பிரார்த்திப்போம்.

சங்கீதம் 65:7 'சமுத்திரங்களின் மும்முரத்தையும் அவைகளுடைய அலைகளின்

இரைச்சலையும், ஜனங்களின் அமளியையும் அமர்த்துகிறீர்.'

ஆன்மீக தலைவர்களும் புத்தியை அருளும் இறைவனின் வார்த்தைக்கு கீழ்ப்படிவோம். இந்த 40 வருட காலம் இலங்கையின் சாபத்தை கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தினால் முறியடிப்போம்.

---

## சர்வதேச செய்திகள்

### ஐக்கிய அரபு இராச்சிய புதிய ஜனாதிபதி தேர்வு




ஐக்கிய அரபு இராச்சியத்தின் புதிய ஜனாதிபதியாக ஷெய்க் முஹமது பின் செயித் அல் நஹ்யான் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த வெள்ளிக்கிழமை மரணித்த பதவியில் இருந்த ஜனாதிபதி ஷெய்க் கலீபாவின் ஒன்றுவிட்ட சகோதரர் ஆவார். ஷெய்க் கலீபா கடந்த சில ஆண்டுகளாக உடல்நலமின்றி இருந்தபோது ஷெய்க் முஹமது அவரது பொறுப்புகளை ஏற்று நடத்திவந்தார்.

61 வயதான ஷெய்க் முஹமதுவின் நிர்வாகத்தின் கீழ் தான் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான உறவுகள் சீராகின. அவர் அந்த வட்டாரத்தில் ஈரானுக்கு எதிரான கூட்டணிக்கு முதலிடம் கொடுத்துள்ளார்.

### சீனாவின் அண்டை நாடுகள் மீதான ஆக்கிரமிப்புகளை கண்காணிக்கும் குவாட் அமைப்பு




அமெரிக்கா தலைமையிலான குவார்ட் அமைப்பு சீனாவின் ஆக்கிரமிப்பு மீதான பார்வையை மேலும் கூர்மைப்படுத்தும் என்பதோடு ஐரோப்பிய நாடுகளின் கவனத்தையும் ஈர்க்கும் என்றும் இந்திய அரசியல் ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். சீனா இமாலய பிரதேசங்களில் மேற்கொண்டுவரும் ஆக்கிரமிப்புகள் மற்றும் தென் சீனக் கடல் பிராந்தியத்தில் நடத்தி வரும் தீவுகள் மீதான உரிமை கோரல் என்பவற்றில் உலக நாடுகள் கவனம் செலுத்துவதில்லை என்ற கவலை நீடித்து வந்தது. இந் நிலையில் குவாட் அமைப்பு அக்குறையைத் தீர்க்கும் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது.

தன்னுடன் எல்லைகளை பகிர்ந்து கொள்ளும் நாடுகளுடன் மட்டுமன்றி எல்லைகளுக்கு அப்பால் உள்ள நாடுகளுடன் சீனா முரண்டுபடுவதாக குளோபல் ஸ்டார் பத்திரிகையில் எழுதியிருக்கும் அரசியல் ஆய்வாளர்கள் கிறிஸ் பிளெக்பேர்ன், இமாலய எல்லையோரக் கிராமங்களில் புதிய நகரங்களுக்கான கட்டமைப்புகளை ஏற்படுத்தி வருவதாகவும், எலக்ட்ரோனிக் யுத்தத்துக்கான நிலையங்கள், காவலரண்கள், ரேடார் பதுங்கு அரண்கள் என்பனவற்றை உருவாக்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தென்சீனக் கடலில் ஸ்ப்ரேட்லி தீவுகள் மற்றும் பெரசல் தீவுகளை பிலிப்பைன்ஸ், தாய்வான், மலேசியா, வியட்நாம், புருணை ஆகிய நாடுகள் சொந்தம் கொண்டாடிவர அவற்றை சீனா ஆக்கிரமித்துள்ளது. திபெத், பாகிஸ்தான், பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகளையும் தமது செல்வாக்கு வளையத்துக்குள் கொண்டு வருவதில் சீனா முனைப்புடன் உள்ளது.

சீனாவின் இந்த ஊடுருவலை உலக நாடுகள் கண்டு கொள்வதில்லை என்று இந்திய அவதானிகள் விசனம் தெரிவித்து வந்த நிலையிலேயே குவாட் அமைப்பு செயற்பாட்டுக்கு வந்துள்ளது. இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரிட்டன் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கும் குவாட் அமைப்பு, இந்தோ – பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும்.

## அமெரிக்காவில் இனவெறி தாக்குதலில் 10 பேர் பலி



அமெரிக்காவின் பபலோ நகரில் 18 வயது வெள்ளையின ஆடவர் ஒருவர் கறுப்பின அயலவர்கள் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதனை ஒரு இனவெறித் தாக்குதல் என்று நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

கடைத் தொகுதி ஒன்றில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற இந்தத் தாக்குதலில் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர். தாக்குதல் துப்பாக்கி மற்றும் உடல் கவசத்துடன் இருந்த தாக்குதல்தாரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நியுயோர்க் நகர கௌண்டி ஒன்றில் இருக்கும் தமது வீட்டில் இருந்து ஒரு மணித்தியாலம் வாகனத்தை செலுத்தி இந்தத் தாக்குதலை நடத்தி இருப்பதோடு, அதனை இணையதளத்தில் நேரடியாக ஒளிபரப்புச் செய்துள்ளார். தாக்குதலுக்கு இலக்கானவர்களில் பதினொரு பேர் கறுப்பினத்தவர் என்பதோடு இருவர் வெள்ளையினத்தவராவர்.

இதனை வெறுப்புக் குற்றம் மற்றும் இனவெறித் தாக்குதல் என்ற கோணத்தில் விசாரணை செய்யப்படுவதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இதனை ஒரு அருவருப்பான தாக்குதல் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கண்டித்துள்ளார்.

## யுனிசெப் கவலை

ஆப்கானிஸ்தானில் 50க்கும் மேற்பட்ட சிறுவர், சிறுமியரின் மரணத்திற்கு காரணமாக அமைந்த தொடர் தாக்குதல்கள் குறித்து கடும் கவலையை வெளியிட்டுள்ள ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யுனிசெப்), இது மிகவும் மோசமான உரிமை மீறல் என்றும் தெரிவித்துள்ளது.

தொடர் கொடூரத் தாக்குதல்களின் விளைவாக ஆப்கானில் ஒரு வாரத்தில் மாத்திரம் ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறுவர், சிறுமியர் கொல்லப்பட்டிருப்பது மிகவும் வெறுக்கத்தக்க உரிமை மீறல் என்று யுனிசெப் நிறுவனத்தின் உலகலாவிய தொடர்பாடல் மற்றும் ஆலோசனைகளுக்கான பணிப்பாளர் பலோமா எஸ்குடெரோ குறிப்பிட்டுள்ளார்.

## உலகின் மிக நீளமான தொங்கு பாலம் திறப்பு



உலகின் மிக நீளமான தொங்கு நடைப்பாலம் அதிகாரபூர்வமாக செக் குடியரசில் திறக்கப்பட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளாகப் கட்டப்பட்டு வந்த தொங்குபாலத்தின் மொத்த நீளம் 721 மீற்றர். இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 1,116 மீற்றர் உயரத்திலும் தரையிலிருந்து சுமார் 95 மீற்றர் உயரத்திலும் தொங்குகிறது. சுமார் 1.2 மீற்றர் நடைபாதை அகலம் கொண்ட அனைத்து வயது, உயரம் கொண்ட குழந்தைகளும் செல்லலாம். இதற்கு முன் உலக சாதனை படைத்த பாக்லங் பர்பத் தொங்கு பாலம் நேப்பாளத்தில் உள்ளது. அது சுமார் 567 மீற்றர் நீளம் கொண்டது.

## வடகொரியாவில் கொவிட் தீவிரம்



வடகொரியாவில் மேலும் 296,000க்கும் மேற்பட்டோருக்குக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. ஆனால் அவர்களில் எத்தனை பேருக்கு கொவிட்–19 ஏற்பட்டுள்ளது என்பது தெரியவில்லை.

மேலும் 40க்கும் மேற்பட்டோர் வட கொரியாவில் உயிரிழந்திருப்பதாகக் கூறப்படுகிறது. அத்தனை பேர் பாதிக்கப்பட்டிருப்பதால், வைரஸ் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்வது கடினமாக இருக்கும் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

உண்மையிலேயே கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகமாக இருக்கக்கூடுமென்று நம்பப்படுகிறது.

வடகொரியாவைத் தோற்றுவித்த நாளிலிருந்து மிக மோசமான நெருக்கடியை எதிர்நோக்குவதாக அதன் தலைவர் கிம் ஜொங் உன் கூறியுள்ளார்.

## பின்லாந்துக்கு ரஷ்ய ஜனாதிபதி புட்டின் எச்சரிக்கை



பின்லாந்து ஜனாதிபதி சவுலி நினிஸ்டோவை தொலைபேசியில் அழைத்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அந்த நாடு தனது நடுநிலை அந்தஸ்தை கைவிட்டு நேட்டோவில் இணைவது தவறு என்று எச்சரித்துள்ளார்.

பின்லாந்தின் பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இருக்கவில்லை என்பதையும் புட்டின் சுட்டிக்காட்டியுள்ளார்.

பின்லாந்து நேட்டோவில் இணைவதற்கான கோரிக்கையை விரைவில் விடுக்கவுள்ளதாக செய்தி வெளியாகி இருக்கும் நிலையிலேயே புட்டினின் இந்த தொலைபேசி அழைப்பு இடம் பெற்றுள்ளது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை அடுத்து சுவீடனும் நேட்டோவில் இணைய விண்ணப்பிக்க திட்டமிட்டுள்ளது. ரஷ்யாவுடன் 1300 கி.மீ எல்லையை பகிர்ந்துகொள்ளும் பின்லாந்து, அந்த நாட்டுடனான முறுகலை தவிர்ப்பதற்காக நேட்டோவில் இணைவதை தவிர்த்து வந்தது.

பின்லாந்தின் இந்த முடிவுக்கு எதிரான பதில் நடவடிக்கை பற்றி புட்டின் குறிப்பிட்டு கூறாதபோதும், ரஷ்யா வெளியுறவு அமைச்சர் இதற்கு எதிரான பதிலடி பற்றி எச்சரித்துள்ளார்.

பின்லாந்துக்கு மின்சாரம் வழங்குவதை ரஷ்யா நிறுத்தி இருப்பது இதற்கான ஆரம்ப சமிக்ஞையாக பார்க்கப்படுகிறது.

# 74 எம்.பிகளின் வீடுகள், சொத்துக்கள், வாகனங்கள் தீவைத்து தாக்கி சேதம்

(ஷம்ஸ் பாஹிம்)

கொழும்பு காலி முகத்திடலில் போராட்டம் நடத்தும் போராட்டக்காரர்களின் மீது நடத்தப்பட்ட தாக்குதலையடுத்த ஏற்பட்ட வன்முறை சம்பவங்களால் சுமார் 74 பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் மற்றும் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இந்த வன்முறைகளில் ஆளும் தரப்பு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் வீடுகள், சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சுமார் 2000 கோடிக்கும் அதிகமான பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக சுமாராக மதிப்பிடப்பட்டுள்ளது.இதில் முன்னாள் பிரமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட சுமார் 45 முன்னாள் அமைச்சர்கள் மற்றும் ராஜாங்க அமைச்சர்களினதும் எம்.பிகளினதும் வீடுகள் இவ்வாறு தீவைத்தும் அடித்தும் சேதமாக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கட்சி அலுவலகங்கள் மற்றும் வாகனங்கள் என்பனவும் இந்த வன்முறைகளின் போது சேதமாக்கப்பட்டதோடு சில பகுதகளில் எம்.பிகளுக்கு சொந்தமான ஹோட்டல்கள்,வர்த்தக நிலையங்கள் என்பனவும் சேதமாக்கப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸவின் கார்ல்டன் இல்லம்,வீரகெட்டிய மற்றும் மெதமுலன வீடு , D. A. ராஜபக்ஸ அருங்காட்சியகம் மற்றும் நினைவுச்சின்னங்கள் தாக்கி அழிக்கப்பட்டதோடு அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் பொரளுகொடை அலுவலகம் தீவைப்பு,கிருளப்படை வீடு சேதமாக்கப்பட்டதோடு முன்னாள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவின் ஹொரணை வீடு, அலுவலகம் மற்றும் 3 வாகனங்களும் முன்னாள் அமைச்சர் கனக ஹேரதின் 2 வீடுகள் அலுவலகம் மற்றும் 4 வாகனங்கள் தீவைக்கப்பட்டதோடு வர்த்தக நிலையமும் சேதமாக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர் நஸீர் அஹமதின் வீ டு ,அலுவலகம், 2 கைத்தொழிற்சாலைகள்,2 வர்த்தக நிலையங்கள், கடைகள் என்பன தீவைக்கப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த வின் 06

பொருட்களின் விலைகள் மேலும் உயரும் வாய்ப்பு;

# நிதி அமைச்சின் சுற்றறிக்கைகளை ரத்து செய்ய பிரதமருக்கு பரிந்துரை

நிதியமைச்சு மற்றும் நிதியமைச்சின் சில தீர்மானங்களினால் இன்னும் சில நாட்களில் பொருட்களின் விலைகள் மேலும் அதிகரிக்கக் கூடும் .

எனவே இது தொடர்பான சுற்றறிக்கைகளை இரத்து செய்யுமாறு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கல் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் யோசனை முன்வைத்துள்ளது.

அத்தியாவசியப் பொருட்கள் விவகாரம் தொடர்பாக பிரதமருக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இந்தக் குழு அண்மையில் பிரதமரால் நியமிக்கப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட அத்தியாவசிய உணவு வழங்கல் குழுவின் தலைவராக வஜிர அபேவர்தன உள்ளார்.பிரதமர் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது குறித்த அறிக்கை பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை தட்டுப்பாடு இன்றி வழங்குவது தொடர்பிலும், அது தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. (பா)

# பிரதி சபாநாயகர் தெரிவுக்கு நாளை சபையில் வாக்கெடுப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

பாராளுமன்றம் நாளை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடவுள்ள நிலையில் பிரதி சபாநாயகர் பதவிக்காக பொது ஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் இருவரின் பெயர்களை முன்வைத்துள்ளன.

பிரதி சபாநாயகர் தெரிவுக்கான வாக்களிப்பு இன்றைய தினம் நடைபெறவுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்த வகையில் பொது ஜன பெரமுனதமது கட்சியின்சார்பில் ஹம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் ராஜபக்சவையும் ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க் கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி 06

வெசாக் பண்டிகையையொட்டி

# 244 சிறைக்கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



வெசாக் பண்டிகையையொட்டி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் 244 சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்தப் பட்டியலில் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு பெரும் சிறைக்கைதிகளை உள்ளடங்குவதாகவும் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க சிறைத்தண்டனையை அனுபவித்து வருபவர்களுக்கு வருடத்தில் 14 நாட்கள பொது மன்னிப்பும், தண்டப்பணத்தை சிறைத் தண்டனை அனுபவித்து வரும் சிறைக்கைதிகளுககு மீதமுள்ள தண்டனையை இல்லாதொழிக்கவும் 06

# மக்களின் தேவைகளை புதிய அரசு பூர்த்தி செய்ய வேண்டும்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தல்

பிரதமர், அமைச்சரவை நியமனம் என்பன அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு அவசியமானவை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நியமனங்கள் பொதுமக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் விதத்தில் இடம்பெற வேண்டுமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, புதிய பிரதமர் சாதாரண பெரும்பான்மைக்கு அப்பால் அனைத்து கட்சிகளின் ஆதரவையும் பெறக்கூடியவராக இருக்க வேண்டும் எனவும் சட்டத்தரணிகள் சங்கத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரணில் விக்ரமசிங்க, பாராளுமன்றத்தில் கூடிய விரைவில் அனைத்து அரசியல் கட்சிகளினதும் ஆதரவை பெற்றுக்கொண்டு பிரதிநிதித்துவ அரசாங்கத்தை அமைக்க வேண்டுமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்று சபை கருதுவதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு அமைக்கப்படும் புதிய அரசாங்கத்தினூடாக 06

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண

# அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு

## தமிழர் பிரச்சினை குறித்து ரணிலுடன் பேசி தீர்வு பெற முயற்சி



தமிழ் மக்களின் பிரச்சினைகளை நன்கு புரிந்து கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடி தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ் ஊடகவியலாளர்களிடம் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர் ,அரசாங்கம் மேற்கொள்ளும் சகல நடவடிக்கைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்கும் என்று இதன் மூலம் அர்த்தமாகாது. மக்களின் நலனுக்காகவும், மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு ஆதரவை வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கிலும் கிழக்கிலும் 06

# கரும்புக்கான கொள்முதல் விலையை 750 ரூபாவினால் அதிகரிக்க நடவடிக்கை

( ஹாலிஎல விசேட நிருபர் )

புத்தல பெல்வத்த சீனி நிறுவனம் ஒரு தொன் கரும்புக்கான கொள்முதல் விலையை 750 ரூபாவினால் அதிகரிக்க தீர்மானித்துள்ளது.

சமீபத்தில் ஒரு தொன் கரும்புக்கான கொள்முதல் விலையை பத்தாயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு கோரி கரும்பு விவசாயிகள் பெல்வத்தை சீனி நிறுவன வளாகத்தில் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பெல்வத்தை சீனி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒரு டன் கரும்புக்கான கொள்முதல் விலையை 750 ரூபாவால் அதிகரிப்பதாக நிர்வாகம் உறுதியளித்தது. கரும்புக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவியல் விலை சூத்திரத்தைத் தயாரித்து அந்த விலை சூத்திரத்தின்படி மே மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில் விலையை மாற்றி அமைக்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

# டிஜிட்டல் பாதுகாப்புப் பயிற்சிநெறி





டிஜிட்டல் பாதுகாப்பின் முக்கியத்துவம் கருதி இன்டர்நியுஸ் ஸ்ரீலங்காவின் பாதுகாப்பான நிகழ்ச்சித் திட்டம் தொடர்ச்சியாக டிஜிட்டல் பாதுகாப்புப் பயிற்சிநெறிகளை முன்னெடுத்து வருகின்றது. இதில் பயிற்றுவிப்பாளர்களாக பயிற்சிபெற்ற ஊடகவியலாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள், நாடு முழுவதும் அது தொடர்பான பயிற்சிநெறிகளை முன்னெடுத்து வருகின்றனர். அதன் ஒரு அங்கமாக அண்மையில் பதுளை ஊவா சக்தி அமைப்பின் செயற்பாட்டாளர்களுக்கு டிஜிட்டல் பாதுகாப்புப் பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சிநெறியை, இன்டர்நியுஸ் ஸ்ரீலங்காவின் புலமைப்பரிசில்தாரரும் ஊடகவியலாளருமான கலாவர்ஷ்னி கனகரட்ணம் வழங்கினார். இதன் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்ற ஊவா சக்தி அமைப்பின் தலைவர் சுரேஷ் நடேசன், குறிப்பாக கொவிட் நிலைமைக்கு பின்னர் டிஜிட்டல் உலகோடு நாம் ஒன்றித்து பயணிக்கின்றோம். அதன்போது, எமது அடையாளங்கள், தரவுகள் போன்றவற்றை பாதுகாத்துக்கொண்டு வினைத்திறனுடன் செயற்பாடுகளை முன்னெடுக்க இவ்வாறான பயிற்சிநெறிகள் அவசியம் என வலியுறுத்தினார். எதிர்காலத்தில் மலையகத்தின் பல பகுதிகளில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை விரிவுபடுத்துவதோடு, பாடசாலை மட்டத்திலும் இதனை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

# சிவனொளிபாத மலை யாத்திரை நிறைவு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

2021/2022 ஆம் ஆண்டின் சிவனொளிபாத மலை யாத்திரை இன்றுடன் நிறைவு பெறுவதாக ஸ்ரீ பாஸ்தானபதி சப்ரகமுவ மாகாண சங்கநாயக்கர் பெல்மதுளை கல்பொத்தாவல விகாரையில் விகாராதிபதி தம்மதித்கு தேரோ நேற்று தெரிவித்தார்.



மலைச்சாரல்

# இரத்தினபுரி மாவட்டத்தில் தாழ் நிலங்களில் வெள்ளம்

## 372 குடும்பங்களைச் சேர்ந்த 1492 பேர் பாதிப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டம் மற்றும் மத்திய மலைநாட்டின் பல பிரதேசங்களில் பெய்துவரும் கடும் மழை காரணமாக இப்பிரதேச மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலைமையால் இம்மாவட்டத்தின் 372 குடும்பங்களைச் சேர்ந்த1492 பேர் பாதிக்கப்பட்டுப் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என இரத்தினபுரி மாவட்ட செ யலாளர் மாலனி லொகுபோதாகம தெரிவித்தார்.

இப்பிரதேசத்துக்கு தொடராக பெய்துவரும் மழை காரணமாக களுகங்கை மற்றும் களுகங்கையின் சிற்றாறுகளின் நீர் மட்டம் உயர்ந்து இரத்தினபுரி, பெல்மதுளை, நிவித்திகல அயகம, குருவிட்ட, எல பாத்த ஆகிய பிரதேசங்களின் தாழ்நிலங்களே இவ்வாறு நீரில் மூழ்கியுள்ளன. வெள்ளப் பெருக்கினால் பாதிப்பு ஏற்பட்டுள்ள மக்களுக்கு உதவிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் பாரதூரமான சூழ்நிலைகளில் மக்களுக்கு உதவி வழங்கத் தயாராக இருப்பதாக இரத்தினபுரி மாவட்டச் செயலாளர் மாலனி லொகுபோதாகம தெரிவித்தார்.



# ஸ்ரீ பாத தேசிய கல்வியியல் கலாசாலை மாணவர்களின் பிரியாவிடை நிகழ்வுகள்



ஸ்ரீ பாத தேசிய கல்வியியல் கலாசாலை கல்விமாணி பட்ட கற்கை நெறி முதலாம் தொகுதி மாணவர்களின் பிரியாவிடை நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றது.

ஸ்ரீ பாத தேசிய கல்வியியல் கலாசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்ற பிரியா விடை நிகழ்வுகள் கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கலாசாலையின் பீடாதிபதி திருவாளர் துரைராஜசிங்கமும் கலாசாலையின் உபபீடாதிபதியும் கற்கைநெறியின் இணைப்பாளர் மெத்யூ, உபபீடாதிபதிகளான சஞ்சீவ், பரசுராம் உட்பட முன்னாள் உபபீடாதிபதிகள் கல்வியற் கலாசாலை விரிவுரையாளர்கள் மற்றும் கற்கைநெறி ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதி உட்பட கற்கைநெறி விரிவுரையாளர்கள் பொன்னாடை போர்த்தி நினைவு சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். ஷான் சதீஷ் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார்.

# பன்மைத்துவம் தொடர்பான கலந்துரையாடல்



(கினிகத்தேனை தினகரன் நிருபர்)

நுவரெலியா மாவட்ட தேசிய சமாதான பேரவையூடாக பன்மைத்துவம் என்ற தொனிப்பொருளில் சர்வமத தலைவர்களுடன் இணைந்து மக்களை தெளிவூட்டும் நிகழ்வு கொட்டகலை ஹில் கூல் விருந்தகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் ஆரம்பத்தில் பன்மைத்துவம் தொடர்பான அறிமுகம் செய்து வைக்கப்பட்டதோடு தொடர்ந்து பன்மைத்துவம் தொடர்பாக கலந்துகொண்டோரிடம் கருத்துக்கள் வினவப்பட்டது. அதனைத் தொடர்ந்து பன்மைத்துவத்தில் பிரிவுகள் ஏற்படுவதற்கு காரணங்களும் பன்மைத்துவத்தில் ஒற்றுமைப்படுத்தும் காரணிகள் மற்றும் பன்மைத்துவத்தை ஏன் சமூகத்திற்கு எடுத்துச்செல்லல் தொடர்பாக ஆராயப்பட்டது.

# நீர் நிலைகளில் நீராடுவதை தவிர்க்குமாறு வலியுறுத்து

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

மலையகத்தில் தொடரும் பெரும் மழை காரணமாக இப்பகுதியில் உள்ள நீர்நிலைகள் பெருக்கெடுத்து வருவதால் இவற்றில் பொழுதுபோக்குவதை, நீராடுவதை தவிர்த்து கொள்ளுமாறு பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் இப்பிரதேசவாசிகள் பொது மக்களை அறிவுறுத்துகின்றனர்.

இளைஞர்கள் இவற்றில் உல்லாசமாக நீராட வருவதால் ஆபத்துக்களில் சிக்கி உயிரிழப்புக்கள் ஏற்பட்டு வருகின்றது. எனவே இத்தினங்களில் இப்பிரதேச நீர்வீழ்ச்சிகள், ஆறுகள், குளங்களில் நீராடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு இவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.


மேலும் சிவனொளிபாத மலை யாத்திரை நிறைவு பெறும் இத்தினங்களில் பக்தர்கள் இரத்தினபுரி வழியில் சிவனொளிபாதமலை செல்லும் யாத்திரிகர்கள் களுகங்கை உட்பட பல நீர்நிலைகளில் நீராடுவோர் கவனயீனம் காரணமாக உயிராபத்துக்களை எதிர்கொள்கின்றனர் என இரத்தினபுரி மாவட்ட நீர்வீழ்ச்சிகள் பாதுகாப்பு அமைப்பு தெரிவிக்கிறது.

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 02ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷவ்வால் பிறை 14

### குறள் தரும் சிந்தனை



மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளான் தாமரையி னாள்

திருமகள், மூதேவி எனப்படும் சொற்கள் முறையே முயற்சியில் ஊக்கமுடையவரையும், முயற்சியில் ஊக்கமற்ற சோம்பேறியையும்சுட்டிக்காட்டிப்பயன்படுவனவாகும்.

## அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியம்

நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார சவாலின் விளைவாகத் தோற்றம் பெற்றுள்ள அரசியல் நெருக்கடி உச்சகட்ட கொதிநிலையை அடைந்த நிலையில், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த 09 ஆம் திகதி தமது பிரதமர் பதவியை இராஜிநாமா செய்தார். அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்பின் பேரில் முன்னாள் பிரதமரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் 26 ஆவது பிரதமராக ஜனாதிபதி முன்னிலையில் கடந்த 12 ஆம் திகதி பதவியேற்றுக் கொண்டார்.

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதைப் பிரதான நோக்காகக் கொண்டு அவர் இப்பதவியை ஏற்றுள்ளார். இந்நாடு சுதந்திரமடைந்த பின்னர் முகம் கொடுக்கும் மிக மோசமான பொருளாதார நெருக்கடியாகத் தற்போதைய நெருக்கடி கருதப்படுகிறது.

தற்போது 73 வயதை அடைந்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நான்கரை தசாப்த காலத்துக்கும் மேற்பட்ட பாராளுமன்ற அரசியல் அனுபவத்தைக் கொண்டவராவார். அத்தோடு ஏற்கனவே ஐந்து தடவை இந்நாட்டின் பிரதமர் பதவியை இவர் வகித்து பரந்த அனுபவத்தைப் பெற்றவராகவும் உள்ளார்.

அந்த வகையில் நாடு ஏற்கனவே முகம் கொடுத்த பொருளாதார நெருக்கடிகளின் போது அவற்றுக்கு தீர்வு பெற்றுக் கொடுத்த அனுபவமும் பெருமையும் இவருக்குள்ளது. குறிப்பாக 1977 இல் இளம் பாராளுமன்ற உறுப்பினராக இவர் தெரிவான சமயம், நாட்டில் பல்வேறு பொருட்களுக்கும் தட்டுப்பாடு நிலவியது. பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக நீண்ட வரிசைகளில் மணித்தியாலயக்கணக்கில் காத்திருக்கும் நிலைக்கும் மக்கள் உள்ளாகி இருந்தனர். அந்த துரதிர்ஷமான நிலைக்கு முன்னாள் ஜனாதிபதி மறைந்த ஜே.ஆர். ஜயவர்தன தலைமையில் தீர்வு காணப்பட்டது. அன்று பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் இருந்த ரணில் விக்கிரமசிங்க இதற்கு முக்கிய பங்காற்றினார். அதேபோன்று 2001 இலும் 2015 இலும் இவர் பிரதமராகப் பதவி ஏற்ற சந்தர்ப்பங்களில் நாடு முகம் கொடுத்திருந்த பொருளாதார நெருக்கடிகளுக்கும் ஆக்கபூர்வமான முறையில் தீர்வு கண்டார்.

இவ்வாறு நாடு ஏற்கனவே முகம் கொடுத்த பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு கண்ட அனுபவத்தின் அடிப்படையில் தற்போதைய பொருளதாதார நெருக்கடிக்கும் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை அவர் பதவியேற்ற உடனேயே ஆரம்பித்துள்ளார். அந்த வகையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களைத் தட்டுப்பாடின்றி விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும், மருந்துப் பொருட்களுக்கு நிலவும் தட்டுப்பாடு தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கைகளை முன்னெடுக்கவும், பசளை பிரச்சினைக்குத் தீர்வு காணவும், எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் நான்கு குழுக்களை அவர் உடனடியாக நியமித்திருக்கின்றார்.

அதேநேரம் இப்பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக சர்வதேச ஒத்துழைப்பு பேரவையொன்றை ஸ்தாபிப்பது தொடர்பிலும் அவர் விஷேட கவனம் செலுத்தியுள்ளார். இது தொடர்பிலான முதற்கட்ட பேச்சுவார்த்தையை பிரதமர் பதவியை ஏற்ற மறுநாளே, இலங்கையிலுள்ள அமெரிக்கா, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளின் தூதுவர்களுடனும் இந்திய உயர் ஸ்தானிகருடனும் பேச்சு நடத்தியுள்ளார். இப்பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமாக அமைந்துள்ளதோடு இலங்கைக்கு உதவி செய்யும் வழிவகைகள் குறித்து ஆராய்வதற்காக ஜப்பானியத் தூதுவர் மறுநாளே டோக்கியோவுக்கு விஜயம் செய்துள்ளார். ஏனைய நாடுகளது தூதுவர்களும் 'இலங்கைக்கு தொடர்ந்தும் உதவி ஒத்துழைப்புகள் நல்கப்படும்' என்று உறுதியளித்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 'தற்போதைய சூழலில் பாராம்பரிய அரசியல் கலாசாரத்தில் இருந்து வெளியேறி கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்க முன்வருமாறு அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். கட்சிகளுடன் கலந்துரையாடல்களையும் அவர் மேற்கொண்டுள்ளார்.

இவ்வாறான சூழலில், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் விடுத்துள்ள ட்வீட்டில், 'நாட்டை பொருளாதார ரீதியில் மீட்டெடுக்க புதிய பிரதமர் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் நம்பிக்கை தரக்கூடிய வகையில் அமைந்துள்ளதோடு, எதிர்வரும் வாரங்களில் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அது நாட்டுக்கும் மக்களுக்கும் அளிக்கும் பாரிய சேவையாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

### கொழும்பில் இடம்பெற்ற வன்முறைகள்;

# 2000 கோடி ரூபா பெறுமதிக்கும் மேலான வாகனங்கள், வீடுகள், உடைமைகள் சேதம்!



கொழும்பு காலிமுகத்திடலில் போராட்டம் நடத்தும் தன்னார்வ போராட்டக்காரர்களின் மீது குண்டர்கள் கும்பலொன்று கடந்த 9 ஆம் திகதி தாக்குதல் நடத்தியதை அடுத்து, ஆத்திரமடைந்த பொதுமக்கள் ஆளும் தரப்பு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் வீடுகள், சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தியுள்ளனர். சுமார் 2000 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அரசியல்வாதிகள் சிலரின் வீடுகள் மற்றும் சொத்துகள் கடந்த திங்கட்கிழமை (9) தாக்குதலில் அழிக்கப்பட்டுள்ளன.

★ **முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கார்ல்டன் இல்லம்**

★ **வீரகெட்டிய மற்றும் மெதமுலன வீடு,**

★ **D. A. ராஜபக்ஷ அருங்காட்சியகம் மற்றும் நினைவுச் சின்னங்கள் தாக்கி அழிக்கப்பட்டன.**

★ **அமைச்சர் தினேஷ் குணவர்தனவி**ன் பொரளுகொடை அலுவலகம் தீவைப்பு, கிருலப்பனை வீடு சேதம்,

★ **முன்னாள் அமைச்சர் ரமேஷ் பத்திரணவின்** காலி வீடு தீவைப்பு.

★ **அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவி**ன் உடுகம்பொல வீடு தீவைப்பு, 200 மிதிவண்டிகள், 3 வாகனங்கள் தீவைப்பு.

★ **முன்னாள் அமைச்சர் விமலவீர திசாநாயக்கவின்** ஹிங்குரானை வீடு மற்றும் மகனின் வீடு சேதம்.



★**முன்னாள் அமைச்சர் மொஹான் பிரியதர்சன டிசில்வாவின்** காலி மற்றும் ரத்கம வீடுகள் மற்றும் ரத்கம காரியாலயம் தீவைப்பு.

★**முன்னாள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவின்** ஹொரணை வீடு, அலுவலகம் மற்றும் 3 வாகனங்கள் சேதம்.

★ **முன்னாள் அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவின்** வீடு மற்றும் 3 வாகனங்கள் சேதம்.

★ **முன்னாள் அமைச்சர் கனக ஹேரத்தின்** 2 வீடுகள் அலுவலகம் மற்றும் 4 வாகனங்கள் தீவைப்பு, வர்த்தக நிலையம் சேதம் மற்றும் தந்தையின் தோட்டம் சேதம்.

★**முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின்** வீடு தீவைப்பு மற்றும் 3 வாகனங்கள் சேதம்.

★ **முன்னாள் அமைச்சர் தேனுக விதானகமகேவின்** 2 கட்டடங்கள் சேதம் மற்றும் 2 பஸ்கள் சேதம்.

★**முன்னாள் அமைச்சர் நாளக கொடஹேவாவின்** கம்பஹ அலுவலகம் மற்றும் வீடு சேதம்.

★**முன்னாள் அமைச்சர் சன்ன ஜயசுமனவின்** அநுராதபுர அலுவலகம் சேதம்.

★ **முன்னாள் அமைச்சர் நஸீர் அஹமட்** வீடு, அலுவலகம், 2 கைத்தொழிற்சாலைகள், 2 வர்த்தக நிலையங்கள், கடை தீவைப்பு.

★ **முன்னாள் அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவின்** வென்னப்புவ வீடு, அலுவகம் மற்றும் வாகனம் தீவைப்பு.

★ **பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவின்** வீடு, அலுவலகம், 3 மோட்டார் சைக்கிள்கள், 2 டிரக்டர் மற்றும் ஆட்டோ தீவைப்பு.

★ **முன்னாள் அமைச்சர் தாரக்க பாலசூரியவின்** வீடு மற்றும் 3 வாகனங்கள் தீவைப்பு.

★ **முன்னாள் அமைச்சர் இந்திக்க அநுருத்தவின்** 2 வீடுகள், 2 அலுவலகங்கள், 2 வாகனங்கள், 50 மிதிவண்டிகள் தீவைப்பு.

★ **முன்னாள் அமைச்சர் சிறிபால கம்லத்தின்** கிரிதலை வீடு மற்றும் அலுவலகம் தீவைப்பு.

★ **பாராளுமன்ற உறுப்பினர் அநுராத ஜயரட்னவின்** கம்பளை அலுவலகம் சேதம். முன்னாள் அமைச்சர் ரீ.வி சானக்கவின் தங்காலை அலுவலகம் சேதம்,

★ **முன்னாள் அமைச்சர் சிசிர ஜெயக்கொடியின்** காரியாலயம் சேதம்.

★ **முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீரவின்** வீடு மற்றும் 6 வாகனங்கள் சேதம்.

★**முன்னாள் அமைச்சர் ரீ.பி ஹேரத் வாரியபொலவின்** வீடு தீவைப்பு.

★ **முன்னாள் அமைச்சர் டொக்டர் சீதா அரம்பபொலவின்வீடு,** 2 வாகனங்கள் சேதம்.

★**பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன திசாநாயக்கவின்** வீடு சேதம்.

★**பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டாரவின்** வீடு சேதம்.

★**பாராளுமன்ற உறுப்பினர் பியல் நிசாந்த** வீடு சேதம்.

★**பாராளுமன்ற உறுப்பினர் அசோக்க பிரியந்த** 2 வீடுகள், 14 வாகனங்கள் தீவைப்பு, வர்த்தக நிலையம் சேதம்.

★**பாராளுமன்ற உறுப்பினர் கபில அதுகோரளவின்** வீடு சேதம்.

★ **பாராளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்கவின்** 2 வீடுகள் மற்றும் 3 வாகனங்கள் தீக்கிரை.

★**பாராளுமன்ற உறுப்பினர் குணபால ரத்னசேகர** வீடு தீவைப்பு.

★**முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷவி**ன் மாகம, திஸ்ஸ, மெதமுலன வீடுகள் மற்றும் திஸ்ஸ அலுவலகம் தீவைப்பு.

★**முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின்** வீடுகள், அலுவலகங்கள் மற்றும் வாகனங்கள் தீக்கிரை.

★ **முன்னாள் அமைச்சர் காமினி லொகுகேயின்** 3 வீடுகள், 2 வாகனங்கள் மற்றும் 2 அலுவலகங்கள் தீக்கிரை.

★ **முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தனவின்** 2 வீடுகள், 2 வாகனங்கள் சேதம்.

★ **முன்னாள் அமைச்சர் ஜனக பண்டார** தம்புள்ள வீடு தீவைப்பு.

★ **முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவி**ன் மல்வானை வீடு தீவைப்பு.

★ **முன்னாள் அமைச்சர் சீ.பி ரத்னாயக்கவின்** ஹரஸ்பெத்த அலுவலகம் தீவைப்பு.

★ **முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவின்** கண்டி வீடு தீவைப்பு.

★ **பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேனவின்** வீடு, அலுவலகம், வர்த்தக நிலையம் சேதம்.

★ **முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின்** நாவலப்பிட்டி கட்சி அலுவலகம் சேதம்.

★ **முன்னாள் அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தனவின்** 2 அலுவலகங்கள், 2 வீடுகள் மற்றும் மோட்டார் சைக்கிள் சேதம்.

★ **முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின்** அலுவலகம் தீக்கிரை.

★ **முன்னாள் அமைச்சர் ரொசான் ரணசிங்கவின்** பொலன்னறுவை வீடு, 2 வாகனங்கள் சேதம்,

★ **முன்னாள் அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷவின்** செவனகல வீடு தீக்கிரை.

★**பாராளுமன்ற உறுப்பினர் ஜெயந்த கெடகொடவின்** வீடு மற்றும் சகோதரர் வீடு சேதம்.

★ **பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அதுகோரளவின்** வீடு, வாகனம் தீவைப்பு மற்றும் எம்.பி கொலை செய்யப்பட்டார்.

★ **பாராளுமன்ற உறுப்பினர் சம்பத் அத்துகோரளவின்** வீடு சேதம்,

★ **பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டி ஆரச்சியின்** பண்டாரவளை வீடு சேதம்.

★ **பாராளுமன்ற உறுப்பினர் சுமித் உடுகும்புரவின்** 2 வீடுகள் மற்றும் வாகனம் தீக்கிரை, 2 வாகனங்கள் சேதம்.

★ **பாராளுமன்ற உறுப்பினர் அகில சாலிய எல்லாவலவின்** பலாங்கொடை அலுவலகம் சேதம்.

★ **பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமாரவின்** அலுவலகம் சேதம்.

★**பாராளுமன்ற உறுப்பினர் நாளக்க கோட்டகொடவின்** வீடு தீவைப்பு, அலுவலகம் , 3 வாகனம் சேதம்.

★ **பாராளுமன்ற உறுப்பினர் கோகிலா குணவர்தனவின்** மீரிகம வீடு, சகோதரரின் வீடு மற்றும் 2 வாகனங்கள் சேதம்.

★ **பாராளுமன்ற உறுப்பினர் மிலான் ஜெயதிலகவின்** வீடு, ஒரு வாகனம் மற்றும் 5 மோட்டார் சைக்கிள் தீவைப்பு.

★ **பாராளுமன்ற உறுப்பினர் இசுரு தொடங்கொடவின்** தாயின் ஜீப் தீவைப்பு.

★ **பாராளுமன்ற உறுப்பினர் பிரேமனாத் தொலாவத்தவின்** வீடு சேதம்.

★ **பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.நந்தசேனவி**ன் வீடு சேதம்,

★ **பாராளுமன்ற உறுப்பினர் அனுப பஸ்குவல்** மத்துகம வீடு சேதம்.

★**பாராளுமன்ற உறுப்பினர் சிந்தக்க மாயாதுன்னே** புத்தளம் அலுவலகம் மற்றும் வீடு சேதம்.

★**பாராளுமன்ற உறுப்பினர் நிபுண ரணவக்க** தெனியாய வீடு, கட்சி அலுவலகம் சேதம்.

★**பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம்** 2வீடுகள், அலுவலகம், ஒரு வாகனம், 8 மோட்டார் சைக்கிள்கள், வர்த்தக நிலையம் தீக்கிரை .

★**பாராளுமன்ற உறுப்பினர் அஜித் ராஜபக்ஷவின்** பஸ் சேதம்,

★**பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ஷவின்** அலுவலகம் சேதம்,

★ **பாராளுமன்ற உறுப்பினர் மகேந்திர ராஜபக்ஷவின்** வீடு சேதம்,

★ **பாராளுமன்ற உறுப்பினர் ராஜிகா விக்கிரமசிங்க** யடியந்தொட்ட வீடு சேதம்.

★ **பாராளுமன்ற உறுப்பினர் சஹான்** பிரதீப் வீடு சேதம்.

★**பாராளுமன்ற உறுப்பினர் டீ. வீரசிங்க வட்டினாகலவின்** வீடு மற்றும் மோட்டார் சைக்கிள் தீவைப்பு.

★ **பாராளுமன்ற உறுப்பினர் சமன்பிரிய ஹேரத்** வீடு, அலுவலகம், வாகனம் தீவைப்பு.

★ **பாராளுமன்ற உறுப்பினர் லலித்குமார மஞ்சுவின்** வீடு மற்றும் அலுவலகம் சேதம்.

★ **பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடியின்** ஹபுகல வீடு மற்றும் அலுவலகம் தீவைப்பு.

★ **முன்னாள் அமைச்சர் நிமல் லன்ஸாவின்** நீர்கொழும்பு வீடு, வாகனம் மற்றும் வர்த்தக நிலையம் தீவைப்பு.

**முன்னாள் அமைச்சர் பிரியங்கர ஜெயரத்னவின்** மாதம்பை வீடு சேதம்.

# சர்வதேச தொழிற்சங்க சம்மேளனத்துடன் இ.தொ.கா தலைவர் ஜீவன் பேச்சுவார்த்தை

இலங்கை தொழிலாளர் காங்கிரஸிற்கும் சர்வதேச தொழிற்சங்க சம்மேளனத்திற்கும் இடையேயான முக்கிய கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது. இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள கடும் பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும் தொழில்துறைகளின் பாதிப்பு தொடர்பாக அச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இ.தொ.காவின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் சர்வதேச தொழிற்சங்க சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் ஷோயா யோஷிடா தலைமையில் நிகழ்நிலை வாயிலாக இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் சர்வதேச தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைமையக அதிகாரிகள், ஆசிய பசுபிக் நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் இ.தொ.கா உப தலைவரும் சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்பாளருமான பாரத் அருள்சாமி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன் போது கருத்துத் தெரிவித்த ஜீவன் தொண்டமான் "வரலாற்று ரீதியில் இன, மத, மொழி பாகுபாட்டின் காரணமாக நாட்டின் வளர்ச்சியில் பின்னடைவை எதிர்நோக்கி உள்ளோம்" எனத் தெரிவித்தார்.

சில சர்வதேச ஊடகங்கள் இப்போராட்டமானது அரசாங்கத்திற்கும் அரசாங்கத்திற்கு எதிரானவர்களுக்கும் இடையிலான போராட்டமாக சித்திரிக்கின்றன. இது முழுமையாக உண்மைக்குப் புறம்பானதாகும். என்றுமில்லாதவாறு அத்தியாவசியப் பொருட்களின் உயர்வு, மின்வெட்டு மற்றும் எரிபொருள் மற்றும் எரிவாயு என்பவை கிடைக்காமை மக்களை சிரமத்தின் உச்சத்துக்கு கொண்டு சேர்த்து உள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார்.

**சில சர்வதேச ஊடகங்கள் இப்போராட்டமானது அரசாங்கத்திற்கும், அரசாங்கத்திற்கு எதிரானவர்களுக்கும் இடையிலான போராட்டமாக சித்திரிக்கின்றன. இது முழுமையாக உண்மைக்குப் புறம்பானதாகும்.**

அனைத்து தொழிற்சங்கங்களும் கடந்த மாதம் 28 ஆம் திகதி மற்றும் இம்மாதம் 06ஆம் திகதி நடத்திய ஒன்றிணைந்த தொழிற்சங்க நடவடிக்கைகளில் இ.தொ.கா பங்கு பற்றியது.




மேலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் காபந்து அரசாங்கத்தில் அங்கம் வகிப்பது தொடர்பான எந்த தீர்மானத்தையும் எடுக்கவில்லை. நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கு ஒரு பொறுப்பு வாய்ந்த தொழிற்சங்கமாக தனது முழு ஆதரவையும் வழங்க எதிர்பார்த்து உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பின்படி நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான அனைத்து செயல்பாடுகளுக்கும் தனது ஆதரவையும் வழங்க உள்ளதாகவும் சர்வதேச தொழிற்சங்க சம்மேளனத்திடம் ஜீவன் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த சர்வதேச தொழிற்சங்க சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் "சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச ரீதியில் உதவக் கூடிய நிதி நிறுவனங்களுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வழிகாட்டுதலின் படி நாம் ஆலோசனைகளை வழங்க முடியும்.

எமது சம்மேளனம் என்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடன் இணக்கத்துடன் செயற்பட்டு வருகிறது" எனத் தெரிவித்தார்.

# கதிர்வேலாயுத சுவாமி ஆலய திருவிழா



கொழும்பு 11, கதிரேசன் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயிலின் மகோற்சவம் அண்மையில் ஆரம்பமாகியது. இவ்வாலயத்தில் கடந்த 12ஆம் திகதி மாலை கணபதி ஹோமம், வாஸ்து சாந்தி, கிராம சாந்தி என்பன நடத்தப்பட்டு கடந்த 13ஆம் திகதி நடைபெற்ற கொடியேற்றத்துடன் இம்மகோற்சவம் ஆரம்பமானது. கடந்த 12ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து 10 நாட்களுக்கு தினமும் காலையும் மாலையும் விஷேட அபிஷேகம், தீபாராதனை, வசந்த மண்டப பூஜை என்பன நடத்தப்பட்டு சுவாமி உள் வீதி உலா வருதலும் இடம்பெற்று வருகின்றன. இவ்வாலயத்தில் நேற்று திருவிளக்கு பூசை நடைபெற்றது.

எதிர்வரும் 17ஆம் திகதி மாலை 5 மணிக்கு மாவிளக்கு பூசையும் 18ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கைலாச வாகன ஊர்வலமும் மாலை 4 மணிக்கு கற்பூரச்சட்டி ஊர்வலமும் 19ஆம் திகதி காலை 8 மணிக்கு மாம்பழத் திருவிழாவும் அன்று மாலை 3 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 20ஆம் திகதி 6 மணிக்கு சப்பறத் திருவிழா வெளி வீதி உலாவும் நடைபெறும்.

இவ்வாலயத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்று மாலை 5 மணிக்கு தேரடி உற்சவம் நடைபெறவுள்ளது. இவ்வாலயத்தில் 22ஆம் திகதி 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 5 மணிக்கு திருக்கல்யாணம் பூந்தண்டிகையும் 24ஆம் திகதி மாலை 5 மணிக்கு பூங்காவனமும் 27ஆம் திகதி மாலை 5 மணிக்கு வைரவர் பூசையும் நடைபெறும்.

## மானுடவியல்
(தொடர்)

### காரி நாயனார்



72

**பெயர்:** காரி நாயனார்
**குலம்:** அந்தணர்
**பூசை நாள்:** மாசி பூராடம்
**அவதாரத் தலம்:** திருக்கடவூர்
**முக்தித் தலம்:** திருக்கடவூர்

**வரலாறு சுருக்கம்:**
"கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கும் அடியேன்" திருத்தொண்டத் தொகை.

தமிழ்த்துறைப் பயன் தெரிந்து அகத்திணை தழுவிய கோவைப் பிரபந்தமியற்றி அதன் முக்கியப் பொருளான வீட்டின்ப விளக்கம் இனிது புலப்பட மூவேந்தர் முன்னிலையில் அரங்கேற்றி அவர்களால் மகிழ்ந்துதவப் பெற்ற பெரும் பரிசுத்தொகை முழுவதும் சிவதலங்கள் நிருமாணித்தலினும் சிவனடியார்க்கு வெகுமதி செய்தலினும் விரயமாக்குஞ் சிவ தொண்டு நெறிநின்ற காரி நாயனார்... மறையார் வாழும் திருக்கடவூரில் தோன்றியவர். அவர் வண் தமிழில் துறைகளின் பயன் தெரிந்து சொல்விளங்கிப் பொருள் மறையத் தமது பெயரால் காரிகோவை என்ற நூலினை இயற்றித் தமிழ் மூவேந்தர்களிடமும் (சேர, சோழ, பாண்டியர்) சென்று நட்பினைப் பெற்றவர். அவர்கள் மகிழும் படி அதற்குப் பொருள் விரித்துரைத்தார்.

**(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

## சைவ மஞ்சரி

## அறநெறி அறிவுநொடி



### கே. ஈஸ்வரலிங்கம்
### தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**19065) மகாசிவராத்திரி எந்நாளில் கொண்டாடப்படுகிறது?**
மாசி தேய்பிறை சதுர்த்தசி

**19066) மகாசிவராத்திரியில் கோயிலில் எத்தனை கால அபிஷேகம் நடக்கும்?**
4 கால அபிஷேகம்

**19067) வாழ்விற்கு வேண்டிய நல்வினை பெற ஐந்தெழுத்தை ஓதும் விதம் எது?** நமசிவாய

**19068) முக்தி பெற்று சிவபதம் பெற நமசிவாயத்தை எப்படி ஓத வேண்டும்?** சிவாயநம

**19069) சிவசின்னங்களாக போற்றப்படுபவை எவை?**
திருநீறு, ருத்ராட்சம், ஐந்தெழுந்து மந்திரம் (நமசிவாய அல்லது சிவாயநம)

**19070) சிவனுக்குரிய உருவ, அருவ. அருவுருவ வழிபாட்டில் லிங்கம் எவ்வகை?**
அருவுருவம்

**19071) பன்னிரு ஜோதிலிங்கத் தலங்களில் தமிழகத்தில் உள்ள தலம் எது?**
இராமேஸ்வரம்

**19072) சிவ வடிவங்களில் ஞானம் அருளும் சாந்தரூபம் எது?**
தட்சிணாமூர்த்தி

**19073) கும்பாபிஷேகத்தை எத்தனை ஆண்டுக்கு ஒருமுறை நடத்துவர்?**
12 (பன்னிரெண்டு)

**19074) குறும்பலா மரத்தை தலவிருட்சமாகக் கொண்ட கோயில் எது?**
குற்றாலம் குற்றாலநாதர் கோயில்

**19075) ஸ்ரீவிருட்சம் என்று சிறப்பிக்கப்படும் மரம் எது?**
வில்வமரம்

## நாதப் பிரம்ம யோகம் - 19

**மூலம்:** பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
**தமிழில்:** ஸ்ரீ ஸக்தி சுமனன்



பண்டிட் ஜவஹர்லால் நேரு இது போன்ற பாரம்பரிய நடனங்களைப் பார்த்து பரவசம் அடைந்தார். அவரது பார்வையில் பாரம்பரிய மற்றும் நாட்டுப்புற நடனங்கள் உற்சாகத்தையும் செயலூக்கத்தையும் வழங்குகின்றன. பண்டிட்ஜீயின் கருத்து மூலம் வாழ்க்கையின் இன்பம் என்பது பொருள் சார் வெற்றிகளுடன் மட்டும் நின்றுவிடாது என்பதை நமக்குக் கற்பிக்கின்றன.

புகழ்பெற்ற எழுத்தாளர் முன்ஷி பிரேம் சந்த் இசை பற்றிய தனது கருத்துக்களை வெளிப்படுத்தினார். மனதின் வேதனையினைத் தீர்ப்பதில் இசைக்கு ஈடாக எதுவும் இல்லை. ஒருவன் எல்லா எல்லைகளையும் தாண்டி, அழுது தனது துன்பத்தைக் கொட்டினால் கூட உண்மை ஆறுதல் கிடைக்காது. ஆனால் இசை அதனைத் தரும்.

பாரம்பரிய இசை மனதை மயக்கினாலும், படைப்பாற்றல், உற்சாகம் மற்றும் அமைதி ஆகியவற்றைக் கொடுப்பதில் திறமையாக இருந்த போதும் இன்றைய காலத்தில் நம் வாழ்வில் சரியான இடத்தைப் பெறவில்லை. இசை மற்றும் நடனம் ஆகிய பாரம்பரியக் கலைகளின் ஸ்தாபக வல்லுநர் என்று முன்னர் அறியப்பட்ட இந்தியா, தனது சொந்த திறமைகளையும் அறிவையும் இழந்து வருகிறது. அதே நேரத்தில் வேறு சில நாடுகள் இந்திய பாரம்பரியத்தின் இந்த கிளைகளுக்கு மரியாதை அளித்து வருகிறது.அவர்களின் முயற்சிகளும் பல வழிகளில் பலனளிக்கத் தொடங்கியுள்ளன.

இசையின் (மற்றும் நடனம்) முக்கியத்துவத்தை அறிந்து நாம் ஒவ்வொருவரும், இந்த உன்னதமான கலை மற்றும் கலாசாரத்தின் இந்த அடிப்படைக் கூறுகளின் நிலையை மீட்டெடுக்க முயற்சி செய்ய வேண்டும். நாம் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு பாரம்பரிய குரல் அல்லது கருவி இசை அல்லது நடனத்தைக் கற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். பாரம்பரிய இசைப் பயிற்சி யோகா சாதனை போன்றது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த குரலிசையில், உள் ஒலியின் அதிர்வுகள் நாபியிலிருந்து பிரம்மரந்திரம் வரை உயர்த்தப்படுகின்றன, அங்கு இந்த அதிர்வுகள் இசையின் தாளத்துடன் இணைக்கப்பட்டு, குரல் ஓட்டம் வெளிப்படுவதற்கு முன்பு மனதின் ஆற்றலால் மின்னேற்றப்படுகிறது. வாயில் இருந்து. இந்த வகை மறைந்திருக்கும் ஸ்வரங்கள் ஒருவித சுழலான சக்தி ஓட்டங்களை உருவாக்குகிறது (உடலின் உள்ளே உள்ள சப்தத்தின் ஆற்றலானது நீரில் உள்ள சுழல் நீரோட்டங்களைப் போன்றது. நாதத்தின் படைப்புச் சக்தியைக் கொண்ட இந்த ஓட்டம், பொருத்தமான ராகங்களின் உதவியுடன் குறிப்பிட்ட திசையில் செலுத்தப்படலாம். **(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

# தமிழ் தரப்புக்கள் மக்களுக்கு துரோகம் செய்வதை நிறுத்த வேண்டும்



## டக்ளஸ் எம்.பி. வேண்டுகோள்

*யாழ்.விசேட நிருபர்*

உருவாகியிருக்கின்ற அரசியல் சூழலைப் பயன்படுத்தி பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மக்களை மீட்பது மாத்திரமன்றி, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களை வென்றெடுப்பதற்கான சந்தர்ப்பமாகவும் தமிழ் தரப்புக்கள் இச்சூழலைப் பயன்படுத்த வேண்டும் என ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈழமக்கள் ஜனநாயக கட்சியினால் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள செய்தி குறிப்பிலையே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கோரிக்கையினை ஏற்றுக்கொண்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வினைக் காணும் நோக்குடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ளார்.

இந்த அரசியல் சூழலைப் பயன்படுத்தி, தமிழ் மக்களின் அரசியல் தீர்விற்கான ஆரம்பமாக உருவாக்கப்பட்டுள்ள இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று, அரசியல் கைதிகள் விடுதலை காணாமல் போனோர் விவகாரத்திற்கான தீர்வு பல்வேறு காரணங்களினால் பயன்படுத்தப்பட முடியாமல் இருக்கும் எமது மக்களின் காணிகளை விடுவித்தல், இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் போன்ற மக்களின் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பமாக இந்தச் சூழலைப் பயன்படுத்த தமிழ் தலைமைகள் முன்வர வேண்டும். மாறாக, சுயலாப அரசியல் நலன்களை மனதில் கொண்டு, வழமை போன்று தமிழ் தலைமைகள் எதிர்ப்பு அரசியலை மேற்கொள்ளுமாயின், அது எமது மக்களுக்கு இழைக்கின்ற இன்னுமொரு வரலாற்று துரோகமாகவும் தவறவிடப்பட்ட இன்னுமொரு சந்தர்ப்பமாகவும் அமையும்" என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தினகரன் வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 மே 16 திங்கட்கிழமை

# நவாலி சென் பீட்டர்ஸ் தேவாலயத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்

*கரவெட்டி தினகரன் நிருபர்*

நவாலி சென் பீட்டர்ஸ் தேவாலயத்தில் நேற்று முன்தினம் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. தேவாலயத்தில் இடம்பெற்ற விசேட கூட்டுப்பிரார்த்தனையைத் தொடர்ந்து மே 18 நினைவு வாரத்தை நினைவூட்டும் வகையில் கஞ்சி வழங்கப்பட்டது. வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொத்துவில் பொலிகண்டி பேரியக்கத்தின் இணைப்பாளர் வேலன் சுவாமிகள், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் கோமகன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# மாமரத்திலிருந்து தவறி வீழ்ந்த குடும்பத்தலைவர் உயிரிழப்பு!

*கரவெட்டி தினகரன் நிருபர்*

மாமரத்தில் ஏறி கொப்பு வெட்டிய போது தவறி வீழ்ந்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் மானிப்பாய், சங்குவேலி தெற்கைச் சேர்ந்த நாகேந்திரம் நகுலேந்திரன் (வயது 48) என்ற 6 பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

மாமரத்தில் 25 அடி உயரத்தில் ஏறி கொப்பு வெட்டும்போது அவர் நின்ற கொப்பு முறிந்ததால் தவறி வீழ்ந்துள்ளார்.

கீழே வீழ்ந்து சுயநினைவற்றுக் காணப்பட்ட அவரை யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சேர்த்த போதும் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை முன்னெடுத்தார்.

# குளவிக் கொட்டுக்கு இலக்கான இருவர் வைத்தியசாலையில்

சாவகச்சேரி விசேட நிருபர்

கொடிகாமம்மந்துவில் பகுதியில் 13/05 வெள்ளிக்கிழமை பிற்பகல் கருங்குளவிக் கூடு கலைந்ததில் இருவர் குளவிக் கொட்டிற்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மந்துவில் மேற்கு பகுதியைச் சேர்ந்த 72 வயதான ஞானசேகரம் மற்றும் 31வயதான நிசாந்தன் ஆகியோரே இவ்வாறு குளவிக் கொட்டிற்கு இலக்காகியுள்ளனர். தற்போது காற்றுடன் கூடிய காலநிலை ஆரம்பித்திருப்பதால் பனை மற்றும் தென்னோலைகளில் கூடு கட்டியிருக்கும் கருங்குளவிகள் கலைந்து ஆபத்தை ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முச்சக்கர வண்டி– மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயம்

*சாவகச்சேரி விசேட நிருபர்*

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மந்துவில் பகுதியில் 14/05 சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார்சைக்கிள் ஆகியன ஒன்றுடன் ஒன்று மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தவசிகுளம் மற்றும் மந்துவில் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மன்னார் சாந்திபுரம் விகாரை சுத்தப்படுத்தல்

*மன்னார் குறூப் நிருபர்*



இளைஞர்கள் மத்தியில் 'சமூக ஒத்திசைவை பலப்படுத்தல்' எனும் தொனிப்பொருளில் வாழ்வுக்கான தன்னார்வத் தொண்டர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் ரஹமா நிறுவனத்தின் அனுசரணையில் முன்னெடுக்கப்பட்டுவரும் இளைஞர் செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக நேற்று காலை (15) சாந்திபுரம் பௌத்த விகாரை சிரமதான பணி முன்னெடுக்கப்பட்டது.

திருமதி றெஜினா ராமலிங்கம் தலைமையில் லியோ மற்றும் இளைஞர் கழகங்கள் , தன்னார்வ இளைஞர்கள் இணைந்து குறித்த சிரமதான பணியை முன்னெடுத்திருந்தனர். குறித்த சிரமதான பணியில் சர்வ மத இளைஞர்கள் மற்றும் யுவதிகள் கலந்து கொண்டு மதங்களுக்கிடையிலான புரிந்துணர்வை செயற்பாட்டு ரீதியாக வெளிப்படுத்தினர். குறித்த சிரமதான பணியில் அதிகளவான இஸ்லாமிய இளைஞர், யுவதிகளும் கலந்து சிரமதான பனியை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது .

# வவுனியா சிறையில் இருந்து மூவர் விடுவிப்பு!!

*கோவில் குளம் குறூப் நிருபர்*

வெசாக் தினத்தினை முன்னிட்டு வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து மூன்று கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

வெசாக் தினத்தையொட்டி நாடளாவிய ரீதியாக 244 சிறைகைதிகள் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து சிறுகுற்றங்களை புரிந்த மூன்று பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

எனினும் அவர்களில் இருவர் வேறு குற்றச்சாட்டுக்களிலும் தண்டனை அனுபவித்து வந்தநிலையில் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

# தாக்குதல்கள் தொடர்பாக இதுவரை 230 பேர் வரை கைது

## பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவிப்பு

நாட்டில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 230 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதன்படி மேல் மாகாணத்தில் 71 பேரும், தென் மாகாணத்தில் 43 பேரும், மத்திய மாகாணத்தில் 17 பேரும், வடமேல் மாகாணத்தில் 36 பேரும், வடமத்திய மாகாணத்தில் 47 பேரும், சப்ரகமுவ மாகாணத்தில் 13 பேரும்,வடக்கில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி கொள்ளுப்பிட்டி மற்றும் காலி முகத்திடல் பகுதிகளில் இடம்பெற்ற கலவரம் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் காரணமாக, பல வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



காலி முகத்திடலில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தற்போது விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும், சட்டமா அதிபர் நேரடியாக விசாரணைகளை மேற்கொள்வதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். காயமடைந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் நேரில் கண்ட சாட்சியங்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இதுவரை பதிவு செய்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் வாகனங்கள் மீது 707 தாக்குதல்கள் மற்றும் நாசவேலைகள் இடம்பெற்றுள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் 230 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 68 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் ஏனைய சந்தேகநபர்கள் நேற்று (15) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (பா)

# தகுதியான ஒருவரே பிரதமராக நியமனம்

## டக்ளஸ் தேவானந்தா புகழாரம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுக்கூட்டம் நிறைவடைந்துள்ளது.

இதன்போது, பிரதமரின் நியமனத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏகமனதாக அங்கீகரித்து அவருக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளது.

இந்தக் கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா பதில் வழங்கினார்.



தற்போதைய நிலையில் தகுதியான ஒருவரே பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவருக்கான ஆதரவை வழங்குவதாகவும் டகள்ஸ் தேவானந்தா தெரிவித்தார்.

புதிய அமைச்சரவையில் அங்கம் வகிப்பது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

# சட்ட மறுசீரமைப்பு குழு சுமந்திரன் MP தலைமையில்

## பிரதமரின் கோரிக்கைக்கு இணக்கம்

பிரதமர் ரணில் விக்ரமசிங்க தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.



அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவீர்களா என பிரதமர் இதன்போது கேட்டுள்ளதுடன், மக்கள் நலன் சார்ந்த மற்றும் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களுக்கு ஆதரவு வழங்குவதாக எம்.ஏ. சுமந்திரன் இதன்போது தெரிவித்துள்ளார்.

தான் அமைக்கவுள்ள சட்ட மறுசீரமைப்புக் குழுவிற்கு தலைமைத்துவம் வழங்க தயாரா என பிரதமர் இதன்போது ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரனிடம் வினவியுள்ளார்.

இதன்போது, பாராளுமன்றத்தின் கீழ் அமைக்கப்படும் சட்ட மறுசீரமைப்புக் குழுவிற்கு தலைமைத்துவம் வழங்க இணக்கம் தெரிவித்ததாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

### மக்கள் நலன் சார்...

தயங்காது என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்துள்ளார். தற்போதுள்ள அரசியற் களநிலையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

### மே 9 அசம்பாவிதங்களுடன்...

குழுவொன்று சந்தேக நபர்களை கைது செய்வதற்கு நாடளாவிய ரீதியில் விசாரணைகளை முன்னெடுப்பதாகவும் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

### உண்டியல் முறையில்

முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போதே குறித்த வெளிநாட்டு நாணயங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இலங்கை நாணயத்தில் அதன் பெறுமதி 1 கோடி 71 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. வங்கியில் வைப்பிடாமல் உண்டியல் முறையின் கீழ் டொலரின் தற்போதைய மதிப்பை விட அதிகமான விலையில் தனி நபர்களுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டு மற்றும் அதற்கு உதவிய இருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கிருலப்பனையிலுள்ள சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

### தனியார் பஸ்...

கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

எனினும் ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டுள்ள காலப்பகுதியில் சகல பஸ்களும் வழமை போன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் எதிர்வரும் சில நாட்களுக்கு இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களுக்கு மாத்திரமே டீசல் கையிருப்பில் உள்ளதாக அதன் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அரசியல் ஏலத்தில் ...

ஊடகங்களிடம் கேட்டுக் கொள்வதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

விசேட அறிவிப்பொன்றை விடுத்து இதனைத் தெரிவித்துள்ள அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது :

ஐக்கிய மக்கள் சக்தி , ஐக்கிய மக்கள் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பணத்துக்கு விற்கப்பட மாட்டார்கள். அரசியல் துறையில் ஏலம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் , ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களின் மக்கள் ஆணையை ஏலத்தில் விட தயாராக இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### பாடசாலைகளுக்கு...

ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி பொது தராதர சாதாரண தரப்பரீட்சை திட்டமிட்டவாறு எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு பரீட்சைகள் திணைக்களத்தின் ஊடாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கமைய விண்ணப்பதாரிகளுக்கான அனுமதி அட்டை மற்றும் பரீட்சை நிலையங்களுக்கு வினாத்தாள்களை பகிர்ந்தளிக்கும் செயற்பாடு தற்போது முன்னெடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பரீட்சைக்கு தேவையான கண்காணிப்பு பணிக்குழாமினரும் தயார்படுத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

### நாட்டின் நெருக்கடி...

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் அமைச்சரவையில் பங்கேற்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அதற்கமைய தங்களது கோரிக்கைகளுக்கான இணக்கத்தை பிரதமர் ரணில் விக்ரமசிங்க எழுத்து மூலம் வழங்கினால் அமைச்சரவையில் பங்கேற்கலாம் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

### நாடு எனும் ரீதியில்...

இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க முன்வர வேண்டும் எனவும் இதன்போது ஜனாதிபதி கேட்டுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### மே. 18 இல் இலங்கையில்...

விஷேட ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் :

2022 மே மாதம் 18 ஆம் திகதி இலங்கையில் தாக்குதல் ஒன்றை நடத்த விடுதலைப் புலிகள் அமைப்பு திட்டமிட்டுள்ளதாக இந்திய உளவுத் துறையை மேற்கோள் காட்டி, கடந்த மே 13 ஆம் திகதி இந்தியாவில் வெளியாகும் 'தி ஹிந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி தகவல் தொடர்பில் இலங்கை வினவிய போது, அவை பொதுவான தகவலாகவே வழங்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு இலங்கைக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இந்திய புலனாய்வுப் பிரிவினர், இலங்கைக்கு அறிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், தேசிய பாதுகாப்பு தொடர்பில் உளவுத்துறை மற்றும் பாதுகாப்புப் படையினருக்குக் கிடைக்கும் அனைத்து தகவல்களும் முறையாக விசாரிக்கப்பட்டு, அந்தந்த பாதுகாப்புப் படையினருக்குத் தெரிவிக்கப்படும் அதேவேளை, பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

### புதிய அமைச்சர்களாக...

அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும் விவசாயத்துறை அபிவிருத்தி அமைச்சராக அனுர பிரியதர்சன யாப்பாவும் புதிய அமைச்சர்களாக ஓரிரு தினங்களில் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ள உள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பொது ஜன பெரமுன கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த இவர்கள் இருவரும் அண்மையில் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுவதற்கு தீர்மானித்துள்ள குழுவில் உள்ளடங்குகின்றனர்.

அதேவேளை நிதியமைச்சை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. அதேவேளை கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் புதிய அமைச்சர்கள் நால்வர் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சராக தினேஷ் குணவர்தன, வெளிவிவகார அமைச்சராக பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரசன்ன ரணதுங்க, எரிசக்தி மின்சக்தி அமைச்சராக காஞ்சன விஜேசேகர ஆகியோர் புதிய அமைச்சர்களாக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

### சபை முதல்வராக...

பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து விலகியுள்ள நிலையில் ஏற்பட்டுள்ள பிரதி சபாநாயகர் பதவி வெற்றிடத்திற்கான நியமனம் அன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய ஐக்கிய மக்கள் சக்தி குறித்த பதவிக்காக பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்னவின் பெயரை முன்மொழிந்துள்ளதாக எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தமது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் பிரதி சபாநாயகர் பதவிக்காக பாராளுமன்ற உறுப்பினர் அஜித் ராஜபக்ஷவின் பெயரை முன்மொழியவுள்ளதாக அதன் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

### வீடுகளை இழந்த...

தற்காலிகமாக வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அண்மைய நாட்களில் 55 எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்களின் வீடுகள் வன்முறையாளர்களால் தீ வைத்து அழிக்கப்பட்டுள்ளன.

மேலும், ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் மேலதிகமாக 06 மெய்ப்பாதுகாவலர்களை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

### தேவைகளை...

பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு மேயர் ரோசி சேனாநாயக்க, ருவான் விஜேவர்தன மற்றும் சுகாதார அமைச்சு, இராணுவம் மற்றும் பொலிஸ் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் இக்குழுவில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் தேவைகளை அறிந்து அவற்றை நிவர்த்தி செய்யுமாறும் தேவைகளை ஆராயுமாறும் குறித்த குழுவினருக்கு பிரதமர் பணித்துள்ளார்.

போராட்டம் நடத்தும் இளைஞர்கள் முன்வைக்கும் நிபந்தனைகளின் அடிப்படையில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாகவும், போராட்டத் தளங்கள் மீது அடக்குமுறை செயற்பாடுகள் நடைபெறாது என்றும் பிரதமர் உறுதியளித்தார்.

இதேவேளை அடுத்த இரு வாரங்களே எமக்கு மிகவும் தீர்க்கமான வாரங்களாக அமையப் போகின்றன. உலக நாடுகளின் தலைவர்கள் மற்றும் தூதுவர்களுடன் நான் எமது நாட்டின் பொருளாதார நிலை குறித்து கலந்துரையாடி வருகிறேன். அவர்களின் வெளிப்பாடுகள் சிறந்ததாக அமைந்தன.

இதேவேளை, நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து நாளை விசேட அறிக்கையொன்றை வெளியிடவுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சுற்றுலா பயணிகளின் ...

உணவு, எரிபொருள் நெருக்கடி நிலை மற்றும் நாட்டில் நிலவும் குழப்பகரமான சூழ்நிலை தொடர்பில் சர்வதேச ஊடகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் இதற்கு நேரடி காரணமாக அமைந்துள்ளதாகவும் அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேற்படி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிகா விஜேசிங்க அது தொடர்பில் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலையில் சுற்றுலாத் துறையின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது சவாலுக்குள்ளாகியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

பல்வேறு நெருக்கடிகள் அதற்கு காரணம் என தெரிவித்துள்ளதுடன் பழைய நிலைமைக்கு சுற்றுலாத் துறை இயல்பு நிலையை அடைவதற்கு இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும் என கூற முடியாதுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.(ஸ)

### 74 எம்.பிகளின் வீடுகள்... (03ஆம் பக்கத் தொடர்)

வீடு,அலுவலகம்,3 மோட்டார் சைக்கிள்கள்,2 டிரக்டர் மற்றும் ஆட்டோ தீவைக்கப்பட்ட அதேவேளை முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஸவின் மாகம , திஸ்ஸ,மெதமுலன வீடுகள் மற்றும் திஸ்ஸ அலுவலகம் என்பவற்றுக்கு தீவைக்கப்பட்டன.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் வீடுகள். அலுவலகங்கள் மற்றும் வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டதோடு முன்னாள் அமைச்சர் காமினி லொகுகேயின் 3 வீடுகள்,2 வாகனங்கள் மற்றும் 2 அலுவலகங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

இது தவிர நாடுபூராவும் பல அமைச்சர்கள் எம்.பிகளின் வீடுகள் சேதமாக்கப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை தமது வீடுகள் சேதமாக்கப்படுவதை தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்காதது தொடர்பில் ஆளும் தரப்பு எம்.பிகள் பலரும் பொலிஸ்மா அதிபருக்கு குற்றம் சுமத்தியுள்ளதோடு அவரை பதவி விலகுமாறும் கோரியுள்ளதாக அறிய வருகிறது. (பா)

### பிரதி சபாநாயகர்... (03ஆம் பக்கத் தொடர்)

விஜே ரத்னவின் பெயரையும் முன்வைத்துள்ளன.

மேற்படி இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுமே தற்போது பாராளுமன்றத்தில் சபா பீடத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்றமானது கடந்த 9 ஆம் திகதி நாட்டில் இடம்பெற்றுள்ள குழப்பகரமான சூழ்நிலையையடுத்து முதல் தடவையாக மீண்டும் நாளை கூடவுள்ளது. நாளைய அமர்வில் புதிய பிரதி சபாநாயகர் தெரிவு இடம்பெறவுள்ளதுடன் சபை முதல்வரும் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் குறிப்பிட்டபடி நாளை பாராளுமன்ற நிகழ்வுகள் வழமை போன்று இடம்பெறவுள்ளன.

அதேவேளை நேற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட சில கட்சிகள் பாராளுமன்றத்தில் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஆதரவை வழங்குவதாக இல்லையா என்பது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளன.

### 244 சிறைக்கைதிகளுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேவேளை 65 வயதுக்கு மேற்பட்ட சிறைக்கைதிகளுக்கு மீதமுள்ள சிறைத் தண்டனையும், தணடப்பணமும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. மேல் நீதிமன்றத்தினால் 40 வருடம் அல்லது அதற்கு மேல் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ள அதேவேளை தணடனையில் 20 வருடத்தைக் கழித்துள்ள சிறைக்கைதிகளுக்கு மீதமுள்ள தண்டனை இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

### மக்களின் தேவைகளை... (03ஆம் பக்கத் தொடர்)

மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

### நினைவேந்தல்...

மே 18ஆம் திகதி உணர்வெழுச்சியுடன் நிகழ்வுகளை நடத்தவும் ஏற்பாட்டுக் குழுவினர் தயாராகி வருகின்றனர்.

எனினும் கடந்த இரு வருடங்கள் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடை விதித்திருந்தது.வடக்கு கிழக்கின் பல இடங்களில் நீதிமன்றங்கள் ஊடாக இந்தத் தடை உத்தரவுகளைப் பொலிஸார் பெற்றிருந்தனர்.

இவ்வாறான நிலையில் இம்முறையும் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடங்கல் எதுவும் ஏற்படுமா என்பது தொடர்பில் புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் ஊடகங்கள் வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த நல்லாட்சியில் சகல நினைவேந்தல் நிகழ்வுகளையும் நடத்த நாம் அனுமதி வழங்கியிருந்தோம். அதேபோல் இனியும் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடை விதிக்க நாம் அனுமதிக்கமாட்டோம். தெற்குக்கு ஒரு நீதி, வடக்குக்கு ஒரு நீதி என்று இருக்கக்கூடாது. போரில் இறந்தவர்கள் அனைவரும் இலங்கையர்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2009 இல் யுத்தம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் 2010 தொடக்கும் வடக்கு கிழக்கில் தமது உறவுகளை இழந்த மக்கள் இவ்வாறு நினைவேந்தல்களை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

நல்லாட்சி அரசில் நினைவேந்தலுக்கு அன்றைய அரசு அனுமதி வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

### அரசு மேற்கொள்ளும்... (03ஆம் பக்கத் தொடர்)

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் அவர்களுடன் நீண்ட நேரம் கலந்துரையாடியதாகவும் அவருக்கு வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினை குறித்து நன்கு தெரியும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அதிகாரப் பகிர்வின் மூலம் தீர்வு காண்பது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடாக இலகுவானது எனவும் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

பலமாக அரசாங்கத்தை கட்டியெழுப்பிய பின்னர் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகள் தொடர்பில் அவருடன் கலந்துரையாடி தீர்வு காணப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### நிதியமைச்சு...

இந்த அமைச்சரவையில் இருந்து நான் சாதித்தேன். நல்லாட்சி அரசாங்கத்தில், முஸ்லிம்களுக்கு எதிராக எத்தனை வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தன .இந்த ஆட்சியில் எந்தவொரு வன்முறைச் சம்பவமும் நிகழாமல் பார்த்துக் கொண்டேன். முஸ்லிம் சமூகத்தின் நலனுக்காக என்னால் முடிந்த பணிகளை விளம்பரமின்றி மேற்கொண்டேன். சிலவற்றில் அதில் வெற்றியும் கண்டேன். முஸ்லிம் சமூகத்திற்கு ஆபத்தாக மாறியிருந்த சில விடயங்களை தடுத்து நிறுத்தினேன். மற்றும் சில விடயங்களை தாமதப்படுத்தினேன்.

14 ஆம் திகதி நடைபெற்ற ஆளும் தரப்பு பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் 91 பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றார்கள். அவர்கள் அனைவரினதும் முன் ஜனாதிபதி எனக்கு நிதி அமைச்சை பொறுப்பேற்கும் படி கேட்டார். நான் மறுத்து விட்டேன். அங்கிருந்த 91 பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சுப் பதவியை ஏற்கும்படி வலியுறுத்தினார்கள். அதனையும் மறுத்து விட்டேன்

புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், எனக்கு அமைச்சுப் பதவியை வழங்க விரும்புகிறார். அதனை அவர் என்னிடம் கூறினார். தயவு செய்து எனக்கு எந்த அமைச்சுப் பதவியையும் தராதீர்கள், பொறுப்பேற்க மாட்டேன் என மறுத்து விட்டேன்.

எனக்கு பதவிகளோ, சலுகைகளோ முக்கியமல்ல. அமைச்சுப் பதவி முக்கியமல்ல. இவற்றினூடாக கிடைக்கும் நலன்களைவிட, சமூக நலனை பிரதானமாக கருதுகிறேன். அமைச்சரவை சம்பளத்தை விட எனது சட்டத்தொழில் மூலம் கிடைக்கும் ஊதியம் அதிகமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.





நாட்டின் தற்போதைய நிலைமைகள் சீராகி நெருக்கடிகள் முற்றாக நீங்க வேண்டுமெனும் நோக்கில் வெலிகம சர்வ மத கமிட்டியினால் ஒழுங்கு செய்யப்பட்ட பிரார்த்தனை நிகழ்வு (12) வெலிகம அக்ரபோதி விகாரையில் நடைபெற்றது. இதில் வெலிகம பிரதேசங்களைச்சேர்ந்த பௌத்த, கிரிஸ்தவ, இஸ்லாம், இந்து சர்வமத தலைவர்கள் கலந்து கொண்டுள்ளதை படங்களில் காணலாம். படங்கள். வெலிகம தினகரன் நிருபர்

# பெறுகை அறிவித்தல்

## சுகாதார அமைச்சு

## பொது வைத்தியசாலை (போதனா) பேராதனை

2022-04-27ஆம் திகதி தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2022-05-12ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்குத் திறக்கப்படுவதற்கிருந்த விலைக்கோரல் நாட்டில் நிலவும் அசாதாரண நிலைமை காரணமாக அன்றைய தினம் நடைபெறவில்லை என்பதுடன் அந்த சகல விலைக்கோரல்களும் திறக்கப்படுதல் 2022-05-23ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது.

**வைத்தியர் அர்ஜுன திலகரத்ன,**
**பணிப்பாளர்,**
**பொது வைத்தியசாலை (போதனா),**
**பேராதனை.**

# காலநிலை மாற்றம்; அனர்த்த முன்னேற்பாடுகளுக்கு தயார் நிலையில் விமானப்படையினர்

நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக எதிர்வரும் தினங்கள் வெள்ளப் பெருக்கு மற்றும் மண் சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதாக காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. அதற்கு அமைய தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அதற்கான முன்னேற்பாடுகளை செய்து வருகின்றது. அதனடிப்படையில் மீட்புப் பணிகளுக்காக இலங்கை விமானப்படையின் ஹெலிகொப்டர் மற்றும் அதற்கான மீட்புப்பணி குழுவினர்களை தயார் நிலையில் வைக்குமாறு இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன ஆலோசனை வழங்கியுள்ளார்

அதற்கமைய இலங்கை விமானப்படை தளங்களான கட்டுநாயக்க, ரத்மலானை, அனுராதபுரம் மற்றும் ஹிங்குராகொடை ஆகிய விமானப்படை தளங்களில் ஹெலிகாப்டர் விமானங்கள் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தோடு மீட்புப் பணிகளுக்கான விசேட பயிற்சி பெற்ற இலங்கை விமானப்படையின் ரெஜிமெண்ட் விசேட படையினர்கள் தயார் நிலையிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

திகதி 13.05.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 4757
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,053,900.00
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 1 3 2 3 4 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,825,052.00

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 787
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,106,500.00
வெற்றி இலக்கினம் M வெற்றி இலக்கங்கள் 19 21 67 81
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,391,390.40

**ராசீ சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0066
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,201,260.00
இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 17 18 39 57
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,558,695.60

**Mega POWER மெகா பவர்** கோடி 25+
சீட்டிழுப்பு இலக்கம் 1105
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,800,520.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 251,302,530.00
ஆங்கில எழுத்து H சுப்பர் நம்பர் 01 வெற்றி எண்கள் 06 14 21 64
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# களுத்துறை மாவட்டத்தில் கடும் அடைமழை

*பேருவளை விசேட நிருபர்*

களுத்துறை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் அடைமழை காரணமாக இம்மாவட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக தாழ்ந்த பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

கடும் காற்று காரணமாக சில பகுதிகளில் மரங்கள் மின் கம்பங்களில் விழுந்ததால் மின்சார விநியோகமும் தடைப்பட்டதோடு பின்னர் சீர் செய்யப்பட்டது.

அதேபோல், சில பகுதிகளின் விளம்பரப் பலகைகள் கீழே விழுந்ததால் வீடுகளின் கூரைகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளன.

களுகங்கை,பெந்தொட்ட கங்கை உட்பட குளங்கள், ஓடைகளில் நீர் மட்டம் கூடியுள்ளது. மழை காரணமாக தோட்டங்களில் இறப்பர் பால் சேகரிப்பு, சீவல், கடற்றொழில், விவசாய நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அடை மழைகாரணமாக தேயிலை, இறப்பர் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்ல முடியாது பாதிக்கப்பட்டுள்ளனர்.

## உள்ளூராட்சித் திணைக்களம் - வடக்கு மாகாணம் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழான கூட்ட அறிவித்தல்

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகிய மரியதாஸ் பற்றிக் டிறஞ்சன் ஆகிய என்னால் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 66(எ) பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் வடக்கு மாகாணத்திற்குள் அமைந்துள்ள வல்வெட்டித்துறை நகர சபையின் வெற்றிடமாகவுள்ள உப தவிசாளரை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் 2022.05.26 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு வல்வெட்டித்துறை நகர சபையின் மண்டபத்தில் கூட்டப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**மரியதாஸ் பற்றிக் டிறஞ்சன்**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**வடக்கு மாகாணம்.**

**உள்ளூராட்சித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்,**
**முதியோர் இல்ல வளாகம்,**
**A9 வீதி, கைதடி,**
**யாழ்ப்பாணம்.**
**14.05.2022 -**

## ஆளுநர் செயலகம், வடக்கு மாகாணம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (NCB)

## கொழும்பு 05/06 இல் அலுவலகப் பயன்பாட்டிற்காக கட்டிடமொன்றின் குத்தகைக்கான சேவை பெறுகை

**பெறுகை இல. G/NP/F3/QUO/01/2022**

1. தலைமைச் செயலாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம், கொழும்பில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகப் பயன்பாட்டிற்காக கட்டிடமொன்றில் குத்தகைக்கான சேவை பெறுகைக்காக ஆர்வமுள்ள தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை திபெகு (திணைக்கள பெறுகைக் குழு) தலைவர் அழைக்கின்றார்.

| விடயம் | அளவு |
|---|---|
| கொழும்பு 05/06 பிரதேசத்தில் அலுவலகப் பயன்பாட்டிற்காக கட்டிடமொன்றின் குத்தகைக்கான சேவை பெறுகை | 3,760 சதுர அடிகள் |

2. விலைக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையில் இடம்பெறும்.
3. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் யாழ்ப்பாணம், சுண்டிக்குழி, பழைய பூங்கா, ஆளுநர் செயலகம், ஆளுநரின் செயலாளரிடமிருந்து விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். (021-2220660, தொலைநகல்: 021-2220661) மற்றும் இதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையில் மதிய போசன நேரம் தவிர்ந்த நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. செயலகத்தில் கிடைக்கத்தக்க ''ஆவணங்களைப் பெற்றுக்கொள்வற்கான விண்ணப்பம்'' என்பதற்கு அவர்களின் கடிதத் தலைப்பில் வேண்டுகோள் ஒன்றையும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா கட்டணத்தையும் செலுத்துவதன் பேரில் 2022-05-17ஆம் திகதி முதல் 2022-05-30ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையான காலத்தில் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.
5. விலைமனுக்களை பதிவுத் தபாலில் அல்லது யாழ்ப்பாணம், சுண்டிக்குழி, பழைய பூங்கா, வட மாகாண ஆளுநர் செயலகத்தின் கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நேரமான 2022-06-02ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும்.
6. இந்த விலைக்கோரல் செயற்பாட்டின்போது விலைக்கோரலின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளவும் அல்லது எந்தவித நட்டஈடுமின்றி எந்தவொரு நிலையிலும் விலைக்கோரல் செயற்பாடுகளை இரத்துச் செய்வதற்கான உரிமையை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**இளமதி சபாலிங்கம் (திருமதி),**
**ஆளுநரின் செயலாளர்,**
**தலைவர் - திணைக்கள பெறுகைக்குழு (மேல் நிலை),**
**ஆளுநரின் செயலகம், வட மாகாணம்,**
**பழைய பூங்கா, சுண்டிக்குழி,**
**யாழ்ப்பாணம்.**

## இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

# பொது அறிவிப்பு

### 2G & 3G செயல்படுத்தப்பட்டமொபைல் போன்களை மட்டுமே பயன்படுத்தும் பார்தி ஏர்டெல் லங்கா (பிரைவேட்) லிமிடெட் (ஏர்டெல்) நெட்வொர்க்கின் சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

3G மொபைல் நெட்வொர்க்கை **24.06.2022** திகதி நிறுத்துவதற்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும். ஆணைக்குழு தனது அனுமதியை பார்தி ஏர்டெல் லங்கா (பிரைவேட்) லிமிடெட் (ஏர்டெல்) நிறுவனத்திற்கு வழங்கியுள்ளதாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. 3G நெட்வொர் நிறுத்தப்பட்ட பின் 2G & 3G செயல்படுத்தப்பட்டமொபைல் போன்களை மட்டுமே பயன்படுத்தும் ஏர்டெல் சந்தாதாரர்களின் 3G இணைப்பு மட்டும், நெட்வொர்க் நிறுத்தப்பட்ட தேதிக்குப் பிறகு தானாகவே துண்டிக்கப்படும். ஏர்டெல் 2G நெட்வொர்க்கின் குரல் மற்றும் குறுஞ்செய்தி இணைப்பு அனைத்து 2G மற்றும் 3G வாடிக்கையாளர்களுக்கும் தடையின்றி தொடர்ந்தும் செயல்படும்.

3G நிறுத்தம் முதன்மையாக, சிறந்த வேகம் மற்றும் திறனை வழங்கும் 4G சேவைகளை வழங்குவதற்கு அதிர்வெண்களைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஏர்டெல்லின் 3G நெட்வொர்க்கின் நிறுத்தம் காரணமாக இடைநிலைக் காலத்தின் முடிவில் ஏற்படும் சேவை இடையூறுகளைத் தவிர்ப்பதற்காக ஏர்டெல்லுக்கு 15 மாத காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது. பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மாறுதல் கட்டத்தின் போது ஏர்டெல் அதன் 3G சந்தாதாரர்களில் குறைந்தது 90% ஐ தங்கள் 4G நெட்வொர்க்கில் உள்வாங்கக் கடமைப்பட்டுள்ளது.

1. ஏர்டெல் சந்தாதாரர்கள் 3G நிறுத்தப்படுவதற்கு முன்னதாக 4G நெட்வொர்க்கிற்கு மாறுவதை ஊக்குவிக்க பொது விழிப்புணர்வு பிரச்சாரங்களை நடத்துங்கள்.
2. அதன் 3G சந்தாதாரர்களுக்கு 4G கைபேசிகளை தவணை அடிப்படையில் மானிய விலையில் வழங்குவதற்கான ஒவ்வொரு முயற்சியையும் எடுங்கள்
3. முதல் 06 மாதங்களுக்கு கவர்ச்சிகரமான கட்டணப் பொதிகள், பல்வேறு சலுகைகள், தொடர்ச்சியான ஊக்கத்தொகைகளை வழங்குவதன் மூலம் மாற்றத்தை இயக்கவும்
4. அதன் 3G சந்தாதாரர்களுக்கு, குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு முன், 4G செயல்படுத்தப்பட்ட கைபேசிகளை மாற்ற, வழக்கமான இடைவெளியில், SMS அனுப்புவதன் மூலம் அவர்களுக்குத் தெரிவிக்கவும்

நீங்கள் ஏர்டெல் சந்தாதாரராக இருந்து, இன்னும் 2G மற்றும் 3G வசதியுள்ள / போனை மட்டுமே பயன்படுத்தினால், சலுகை விதிமுறைகளின் கீழ் புதிய மொபைல் / போனுடன் 4G இணைப்பைப் பெற, உடனடியாக 780 என்ற குறுகிய குறியீடு மூலம் ஏர்டெல்லைத் தொடர்புகொள்ளலாம். இந்தச் சலுகையை **01.06.2022** வரை மட்டுமே நீங்கள் அனுபவிக்க முடியும் என்பதை நினைவில் கொள்ளவும்.

குறிப்பிட்ட காலக்கெடுவில் 4G மொபைல் / போனைப் பெறுவதில் ஏதேனும் சிரமம் ஏற்பட்டால், இந்த ஆணையத்தில் புகார் அளிக்கலாம்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு**
**இல. 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08.**
**மின்னஞ்சல்:** smcomp@trc.gov.lk **தொலைநகல்: 011 2689341 தொலைபேசி: 011 2689345**

## நிதி அமைச்சு

## அபிவிருத்தி லொத்தர் சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சீட்டிழுப்பு லொத்தர் சீட்டுக்களை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல், அச்சடித்தல் மற்றும் வழங்கல்

**BID No.: DLB/PRO/2022/05**

மூன்று மாதங்களுக்கு தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து லக்ன வாசனா, அத கோடிபதி, ஷனிதா, சுப்பர் போல், அபிவிருத்தி அதிர்ஷ்டம், ஜயோதா, கப்ருக மற்றும் சஸ்ரி ஆகியவற்றின் வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல், அச்சடித்தல் மற்றும் வழங்கல் ஆகியவற்றிற்காக அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. A Bidder can quote for one or more lottery brands whereas the selection of most eligible suppliers will be considered on lottery brand wise base on the printing capacity.
4. 2022.05.17 ஆம் திகதியிலிருந்து 2022.05.30 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, 356 ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் விலைமனுக்கோரல் ஆவணத்தின் தொகுதியொன்று இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
5. 2022.05.17 ஆம் திகதியிலிருந்து 2022.05.30 ஆம் திகதி வரையும் திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரையும் (பொது விடுமுறைகள் நீங்கலாக) மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத ஆவணக்கட்டணமாக 25,000 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், வியாபார தலைப்புக் கடிதத்தில் கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, கொழும்பு-2 என்ற முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, 356 ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
6. BDS இன் ITB 20.2 இல் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறான தொகைகளுக்கான 180 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு பெற்ற வர்த்தக வங்கியிலிருந்து பெற்றதுமான விலைமனுப்பிணையொன்றுடன் அல்லது வங்கி உத்தரவாத பாங்கில் பெறப்பட்டதும் கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, 356 ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதுமான விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. இங்கே குறிப்பாக குறிப்பிட்டுள்ள விலைமனுவிற்காக '1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்திற்கமைவாக' பெறப்பட்ட ஒப்பந்த பதிவு சான்றிதழை அனைத்து விலைமனுதாரர்களும் கொண்டிருத்தல் வேண்டும்.
8. கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, 356 ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையில் 2022.05.24 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறும்.
9. விலைமனு ஆவணத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து விபரமான விபரங்களையும் விலைமனுதாரர்கள் வழங்கல் வேண்டும்.
10. 2022.05.31 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, அபிவிருத்தி லொத்தர் சபை மே/பா., அபிவிருத்தி லொத்தர் சபை, இல. 356, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, கொழும்பு-02 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியிலுள்ள பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Bid for the Designing, Developing, Printing and Supplying of Draw Lottery tickets to the Development Lotteries Board" என்ற சொற்கள் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் விலைமனுப் பெயர் மற்றும் விலைமனு இலக்கமும் குறிப்பிடப்படல் வேண்டும்.
11. அனைத்து விலைமனுக்களும் 2022.05.31 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு மேலேயுள்ள முகவரியில் மேலதிகமான அறிவித்தலின்றி திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும்.
12. பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் எந்தவொரு அல்லது அனைத்து முன்வைப்புக்களையும் அல்லது ஒரு பகுதியை ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கும் தேவைப்படின் மேலதிக தகவலை அழைப்பதற்கும் எந்தவொரு காரணங்களையும் முன்வைக்காமல் மேற்கொள்வதற்கான ஏகபோக உரிமையை திணைக்கள பெறுகை குழுவானது கொண்டுள்ளது.
13. மேலேயுள்ள நேரம், திகதிகள் மற்றும் குறிப்பிட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பார்வையிடலாம். அத்துடன் www.dlb.lk என்ற அபிவிருத்தி லொத்தர் சபையின் இணையதளத்திலும் இதனை பார்வையிடலாம்.
14. மேலதிக விபரங்கள், தேவைப்படின், ITB 07 இல் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, 356 ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைக்கான உதவி பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**356, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, கொழும்பு-02.**
**தொலைபேசி: 011-4824824.**
**www.dlb.lk**
**12.05.2022**

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

தினகரன் விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2022 மே 16 திங்கட்கிழமை

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி

# முன்னாள் வீரர் சைமண்ட்ஸ் கார் விபத்தில் உயிரிழப்பு

அவுஸ்திரேலியாவின் டவுன் வில்லே பகுதிக்கு வெளியே நேற்று முன்தினமிரவு ஏற்பட்ட கார் விபத்தில் சிக்கி ஆண்ட்ரூ சைமண்ட்ஸ் உயிரிழந்தார்.



கார் விபத்தில் பலியான சைமண்ட்சுக்கு லாரா என்ற மனைவியும், குளோ மற்றும் பில்லி என 2 குழந்தைகள் உள்ளனர்.

ஆஸ்திரேலியா அணிக்காக 198 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள சைமண்ட்ஸ் 5,088 ரன்கள் மற்றும் 133 விக்கெட்டுகளை எடுத்துள்ளார். 26 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 1,462 ரன்கள் எடுத்துள்ளார். இதுதொடர்பாக, குயின்ஸ் லேண்ட் போலீசார் கூறுகையில், சைமண்ட்சின் கார் ஹெர்வி ரேஞ்ச் பகுதிக்கு வந்தபோது சாலையை விட்டு விலகி விபத்தில் சிக்கியது. காரில் அவர் ஒருவர் மட்டுமே பயணம் செய்துள்ளார். அவரை காப்பாற்ற துணை மருத்துவர்கள் முயன்றனர். ஆனால், அதில் பலனில்லை என தெரிவித்துள்ளார். நடப்பு ஆண்டில் முன்னாள் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களான ஷேன் வார்னே மற்றும் ராட் மார்ஷ் ஆகியோர் உயிரிழந்த நிலையில், சைமண்ட்சும் விபத்தில் சிக்கி உயிரிழந்தது ரசிகர்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை–பங்களாதேஷ் முதல் டெஸ்ட்

# மெத்தியூஸ்-குசல் சிறப்பான ஆட்டத்துடன் இலங்கை அணி வலுவான நிலையில்

சிட்டங்கொங்கில் நேற்று ஆரம்பமான இலங்கை பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி 4 விக்கெட் இழப்புக்கு 258 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையிலுள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் திமுத் கருணாரத்ன முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். ஆரம்ப ஜோடியாக திமுத் கருணாரத்னவுடன் ஓஷட பெர்னாண்டொ களமிறங்கினார். வலுவான ஆரம்பத்தை பெறுவதற்கு முன்னரே இலங்கை முதல் விக்கெட்டுக்காக தலைவர் திமுத் கருணாரத்ன 09 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.



ஓஷட பெர்னாண்டோவுடன் இரண்டாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த குசல் மெண்டிஸ் நிதானமாக ஆடிய நிலையில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 66ஆக இருந்த நிலையில் இரண்டாவது விக்கெட்டாக ஓஷட பெர்ணான்டோ 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அனுபவ வீரர் அஞ்சலோ மெத்தியூஸ், மெண்டிசுடன் இணைந்து இலங்கை அணியை வலுவான நிலைக்கு இட்டுச் சென்றார். மூன்றாம் விக்கெட் இணைப்போட்டமாக இந்த ஜோடி 92 ஓட்டங்களைக் குவித்தது. அரைச்சதத்தைக் கடந்த மெண்டிஸ் 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த சகலதுறை வீரர் தனஞ்ஜய டி. சில்வா வந்த வேகத்திலேயே 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, பின் சிரேஷ்ட வீரர் தினேஸ் சந்திமால் மெத்தியூசுடன் இணைந்து முதல் நாள் முடியும் வரை மேலும் விக்கெட்டுகளை இழக்காமல் சிறப்பாக ஆடி 5வது விக்கெட்டுக்காக ஆட்டமிழக்காத 75 ஓட்ட இணைப்பாட்டத்தைப் பெற்றனர்.

பொறுப்புடன் ஆடிய அஞ்சலோ மெத்தியூஸ் முதல் நாள் முடிவில் மெத்தியூஸ் சதம்கடந்து 114 ஓட்டங்களையும், தினேஷ் சந்திமால் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களுடன் களத்திலிருந்தனர். இது மெத்தியூசின் 10வது சதம் என்பது குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷ் பந்துவீச்சில் நயிம் ஹசன் 2 விக்கெட்டுகளையும் தாஜுல் இஸ்லாம், சக்கீப் அல் ஹசன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் இரண்டாவது நாளாகும்.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 21-05-2022 இல. 08




## கிழக்கின் குரல்

நிந்தவூரில்

# சிறுபோக விதைப்பு வேலைகள் மீண்டும் ஆரம்பம்

**மாளிகைக்காடு குறுப் நிருபர்**

நிந்தவூர் விவசாய விரிவாக்கத் பிரிவிற்குட்பட்ட நூற்றுக் கணக்கான வயல் நிலங்களில் சிறுபோக நெல் விதைப்பு வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் நீர்ப்பாசன வசதியிருந்தும் உழவு இயந்திரங்களுக்கு எரிபொருள் இன்மை காரணமாக விவசாயிகள் சிறுபோக வேளாண்மை செய்கைக்காக தமது வயல் நிலங்களை உழுது பண்படுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர்.

தற்போது ஓரளவிற்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உழவு வேலைகளுக்காக எரிபொருள் வழங்கப்படுவதால் மீண்டும் உழுது பண்படுத்தி விதைக்கும் வேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

இருந்தும் சாதாரண போகங்களை விட இப்போகத்தில் இரண்டு மடங்கு செலவு அதிகரித்துள்ளதாகவும் அருகிலுள்ள வயல்கள் விதைத்து ஒரு மாதம் சென்றுள்ள நிலையில் நெல்பயிர் கதிர்பறியும் நிலையில் ஏனைய பகுதிகளில் அறுவடை இடம்பெறுகையில் நீர் பிரச்சினைகள் மற்றும் யானைகளின் படையெடுப்பு போன்ற பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# இலவச கல்விக் கருத்தரங்கு

**துறைநீலாவணை நிருபர்**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள துறைநீலாவணை மகாவித்தியாலய (தேசிய பாடசாலை) மாணவர்களின் நலன் கருதி தமிழ் ஒப் லங்கா உதவும் கரங்கள் அமைப்பின் அனுசரணையில் இடம்பெறவுள்ள இலவச ஆங்கில பாட கல்விக் கருத்தரங்கு இன்று காலை 08.30 மணிக்கு (16.07.2022) இப் பாடசாலை அதிபர் தி. ஈஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக் கருத்தரங்கின் வளவாளர்களாக பிரபல ஆங்கில பாட ஆசிரியர்களான ஆ.ரவிச்சந்திரன், திருமதி விமலா ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

தமிழ் ஒப் லங்கா தலைவர் எஸ்.இளந்தீபன். இவ் அமைப்பின் சர்வதேச நாடுகளுக்கான இணைப்பாளர் ச.கலாதரன் ஆகியோர் அழைப்பு அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.





மட்டக்களப்பில் இயங்கும் Batti FM இணைய வானொலி நடாத்திய அணிக்கு 7 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் முதலாமிடத்தை ஏசியன் விளையாட்டு கழகத்தினர் பெற்றுக் கொண்டது. இப்போட்டி நிகழ்வில் அதிதிகளாக லவன் நற்பணி மன்றத்தின் தலைவர் லவக்குமார், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பிரதி செயலாளர் ஜெயராஜ், வணக்கம் வாழ்க தமிழ் அமைப்பின் செயலாளர் பிரவீன் மற்றும் Batti FM குழுவினர் என பலரும் கலந்து கொண்டனர்.

பெரியபுல்லுமலை

# புனித செபமாலை மாதா திருத்தலத்தின் வருடாந்த திருவிழா திருப்பலி

**சிவம் பாக்கியநாதன் மட்டக்களப்பு விசேட நிருபர்**



மட்டக்களப்பு பதுளை வீதி, பெரியபுல்லுமலை புனித செபமாலை மாதா திருத்தலத்தின் வருடாந்த திருவிழா திருப்பலி நேற்று (15) நடைபெற்றது.

திருத்தலத்தின் வருடாந்தக் கொடியேற்றம் கடந்த 06.05.2022 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நவ நாள் ஆராதனைகள் இடம்பெற்றன. திருவிழாவின் கூட்டுத் திருப்பலியை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி ஜோசப் பொன்னையா, திருத்தலத்தின் நிர்வாகக் குரு அருட்தந்தை பேதுரு ஜீவராஜ், அருட்தந்தை அன்ரனி ஜீவராஜ் உள்ளிட்ட அருட்தந்தையர்கள் ஒப்புக் கொடுத்தனர்.

ஏறாவூர்ப் பற்று செங்கலடி பிரதேச சபையின் தலைவர் எஸ்.சர்வானந்தனும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆரையம்பதி எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் மண்ணெண்ணையை பெற மக்கள் வரிசை



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடி தெற்கு எல்லையிலுள்ள ஆரையம்பதி எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் கடந்த ஒரு வாரத்துக்கு பின்னர் மண்ணெண்ணெய் ஞாயிற்றுக்கிழமை (15) வழங்கப்பட்டது.

மக்கள் நீண்ட வரிசையில் நின்று மண்ணெண்ணையை பெற்றுக் கொள்வதை காணமுடிந்தது.

சமையல் எரிவாயு தட்டுப்பாட்டையடுத்து பொது மக்கள் மண்ணெண்ணெய் அடுப்பை உபயோகித்து வருகின்றனர்.

இதனால் மண்ணெண்ணைக்கான தேவை அதிகரித்துள்ளது. இந்த நிலையில் பொது மக்கள் மண்ணெண்ணெய்யைப் பெற பெரிதும் சிரமப்பட்டு வருகின்றனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 16ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.